...D BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE.

தென்மொழித்தேன் வாசகம்.

ஐந்தாம் புத்தகம்.

ஐந்தாம் வகுப்பு.

BY

REV. PETER ALOYSIUS

Principal,

St. Joseph's High School, Chingleput.

1934. [விலை அணா 6.

தென்மொழித் தேன் வாசகம்.

ஐந்தாம் புத்தகம்.

ஐந்தாம் வகுப்பு.

BY
REV. PETER ALOYSIUS
Principal,
St. Joseph's High School, Chingleput.

பதிவு செய்தது] 1934. [விலை அணா 6.

PRINTED AT THE
ST. JOSEPH'S ORPHANAGE PRINTING WORKS,
CHINGLEPUT.

முகவுரை.

தென்மொழித்தேன் வாசகம், இரண்டாவது வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையில் எழுதப்பட்டிருக்கிறது. இது தற்காலப் போக்கை அநுசரித்துப் பலநாள் உபாத்திமைத் தொழிலில் பயின்றவர்களோடு கலந்து எழுதப்பட்டிருக்கிறது. ஒரேவகையான பல பாடங்களை எழுதாமல், கூடியவரையில் சிறுவர்களுக்கு மிகத் தேவையான விஷயங்களிற் பலவற்றைச் சுருக்கமாய் எளிய நடையில் ஒன்றுக்கொன்று படிப்படியாக ஏற்றமுள்ளதாக அமைக்கப்பட்டிருக்கிறது. மொழிகளும், வாக்கியங்களும், பொருள் விளக்கங்களும், ஒன்றிற்கொன்று படிப்படியாய் உயர்ந்து அமைந்திருப்பது நமது வாசக புத்தகங்களைத் தொடர்ச்சியாய் வாசிப்பவர்களுக்குப் புலப்படாமற் போகாது.

ஆரம்பக்கல்வி பயிற்றும் பாடசாலைகளில் வாசிக்கும் சிறுவர்களில் அநேகர் வறுமையை முன்னிட்டும் இதர அசௌகரியங்களாலும் ஐந்தாவது வகுப்போடு படிப்பை விட்டுவிட வேண்டியவர்களாயிருப்பதால் அத்தகைய சிறுவர்களும் எளிதில் உணர்ந்து பயனடையுமாறு அநேக முக்கிய விஷயங்கள் இப்புத்தகத்தில் நூதன முறையில் விளக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாய் நித்திய உபயோகத்திலும் அநுபவத்திலும் வந்துள்ள மண்ணெண்ணெய் கற்

பலகை முதலியவற்றின் விபரங்களும், சரீர சௌக்கியத்துக்கு ஆதாரமான வைத்திய சிகிச்சை, அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிற சேவிங்ஸ் பாங்கியின் உபயோகம், பொதுச்சாலையில் நடக்கும் முறை, சாரணர் இயக்கம் முதலியனவும், சில மேனாட்டுப்பெரியார்கள் சரித்திரமும், பொன்போன்ற நீதிபுகட்டும் கதைகளும், பிறவும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

எளிதில் பொருள் விளங்கக்கூடியனவும் சிறுவர்கள் அவசியம் உணர்ந்து கொள்ளவேண்டிய நீதிகள் புகட்டுவனவுமான செய்யுட்களையே பாடமாகத் தொகுத்திருக்கிறோம்.

19—12—33
செங்கல்பட்டு.

P. A.

பொருள் அட்டவணை.

தென்மொழித் தேன் வாசகம்.

ஐந்தாம் புத்தகம்.

1. இராஜ விசுவாசம்.

நம்மிடத்து அதிக அன்பு கொண்டவர்கள் நமது பெற்றோர்கள். நம்முடைய தகப்பனர் நமக்காகப் பாடுபட்டு சரீர சௌக்கியமும் பாராமல் நமக்கு வேண்டியதைச் செய்கிறார். நமது தாய் நம்மைப் பத்துமாதம் சுமந்துபெற்று நமக்கு ஆகாரம் ஊட்டி நாம் நோய் அடைந்தால் நமக்கு மருந்து கொடுக்கிறாள். நம்மீது தாய் தந்தையர் வைத்திருக்கும் அன்பிற்கும் பிறர் வைத்திருக்கும் அன்பிற்கும் வித்தியாசம் உண்டு.

நம் தாய் தந்தையரின் அன்பே வித்தியாசப்படுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் கடமைகளே. தாயின் வேலை நமக்கு உணவளிப்பதும், வளர்ப்பதுமாம். தந்தையின் வேலை நம்மைக் காப்பதும் நாம் தவறி நடந்தால் தண்டிப்பதுமாம். நாம் நல்வழிப்பட்டு நன்றாக இருக்கவேண்டுமானால் நமக்கு இவ்விரண்டுவித அன்பும் இன்றியமையாதவை.

தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் இவ்விருவகைப் பட்டபெற்றோர் அன்பு வேண்டுவதுபோல் ஒரு ஜனசமூகத்திற்கும், அதன் வளர்ப்பிற்கும், க்ஷேமத்திற்கும் இவ்வகைப் பட்ட அன்பு அவசியமாகின்றது. ஒரு ஜனசமுதாயத்தை அன்புடன் நடத்தி அச்சமுதாயத்திற்குப் பெற்றோர் ஸ்தானத்தில் இருப்பவர் அரசர். அந்த அரசரின் மக்கள், அந்த அரசர் ஆளும் தேசத்துக் குடிகள். ஆகையால் அரசர் தம் குடிகளிடத்தில் தாயின் அன்பும், தந்தையின் அன்பும் பாராட்டுகிறார்.

எப்படித் தாயின் அன்பு நம்மை வியாதியினின்றும் காப்பாற்றுகிறதோ அதேமாதிரி அரசர் தம் குடிகளிடத்துப் பாராட்டும் அன்பு அவர்கள் தேகசௌக்கியமாயிருக்கச் செய்கின்றது. குடிமக்களின் தேக சௌக்கியத்திற்கு முக்கியமானவைகளெல்லாம் செய்து கொடுக்கிறார். நோய் வராது தடுக்க சுகாதார உத்தியோகஸ்தர்களையும், நோய் வந்தபின் குணப்படுத்த ஆஸ்பத்திரிகளையும், வைத்தியர்களையும் நியமித்திருக்கிறார். தந்தையைப்போல் மனவளர்ச்சியைக் கவனிக்க அநேக சாதனங்களையும் நேர்மையாக நடக்க ஒழுக்க முறைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். சிஷ்டர்களைப் பரிபாலனம் பண்ணி துஷ்டர்களைத் தண்டித்துக் குடிகளுக்குத் துன்பம் வராமல் தடுத்துக் காப்பாற்றுகிறார். மேலும் குடிகளுக்கு ஏதாவது குறைகளிருந்தால்நேராகவும், நியாயஸ்தலங்கள் மூலமாகவும் குறைகளைப் பரிகாரம் செய்கிறார். இப்படி நமக்கு ஒவ்வொரு விதத்திலும் அன்பு காட்டும் அரசரிடத்தில் நாம் விசுவாசமும் பக்தியும் பாராட்டவேண்டியது அவசியம். நாம் பெற்றோ

ரிடத்தில் அன்பு பாராட்டவேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு நம்முடைய சமுதாயத்துக்கே பெற்றோராயிருக்கும் அரசரிடத்தில் அன்பு பாராட்டவேண்டுவதும் அவசியம்.

அரசர், பெற்றோர் அன்பு பாராட்டுவதால், நம்முடைய பக்திக்கும் அன்புக்கும் உடையவராகிறார். அவரைப் போற்றி அவருக்கு அடங்கி அவருடைய கட்டளைகளை மீறி நடவாமலிருப்பது நம்முடைய ஒரு பெரிய கடமையாகின்றது. நம்முடைய க்ஷேமத்திற்கும் இக்கடமையைக் கைக்கொள்வது நல்லது. ஏனென்றால் "வேந்தன் சீறின் ஆந்துணையில்லை" என்ற பழமொழிப்படி அரசன் ஆணையை மீறி நடந்தால் துன்பமே விளையும். நம்மை ஆதரிக்க ஒருவரும் முன்வரமாட்டார்.

ஆகையால் அரசரிடத்து அன்பும் பக்தியும் காட்டி அவருடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து அமைதியாக நடந்துகொள்வதே நமது தருமமாகும். அரசர் தேசத்திற்கே முதல்வராக இருக்கிறபடியாலும், தேசத்திற்கு உயிர் போன்றவராகையாலும், அவருடைய க்ஷேமத்தையே நாம் எப்பொழுதும் கோரவேண்டும். அவர் "நீடூழி வாழ்வாராக" என்பதே நமது பிரார்த்தனையாக இருக்கவேண்டும். அவர் க்ஷேமமாய் இருந்தால்தான் நாமும் க்ஷேமமாய் வாழலாம்.



2. கிரிஸ்டபர் கோலம்பஸ்.

பதினைந்தாவது நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்திலிருக்கும் ஒவ்வொரு தேசத்தினின்றும் இந்தியாவுக்குக் கடல் வழி கண்டுபிடிக்க மாலுமிகள் கிளம்பினார்கள். அவர்களில் ஒருவருக்கு பூமி உருண்டையாக இருக்கிறபடியால் மேற்குத் திசையே கடலில் போனால் இந்தியாவுக்குப் போகலாமென்று முதல் முதலில் தோன்றியது. அவரே கிரிஸ்டபர் கோலம்பஸ். ஆனால் அவர் அப்படி மேற்கே போனதில் இந்தியாவுக்குப் போகவில்லை. அமெரிக்கா கண்டத்தைக்

கண்டுபிடித்தார். அவர் அக்கண்டத்தை எப்படிக் கண்டு பிடித்தார்; என்னென்ன கஷ்டங்கள் அனுபவித்தார் என்பதை அறிய நீங்கள் விரும்புவீர்களல்லவா ? அவருடைய சரித்திரமே வெகு ஆச்சரியமானது.

கிரிஸ்டபர் கொலம்பஸ் என்பவர் இதாலியா தேசத்தில் ஜினோவா என்ற பட்டணத்தினருகில் உள்ள டேர்ரா ரோஸா என்ற கிராமத்தில் 1445-ம் ஆண்டில் பிறந்தார். அவருடைய பதினான்காம் வயதில் அவர் கப்பலில் வேலைக்கு அமர்ந்தார். அந்தக்காலத்தில் கப்பலில் செல்வோர் கப்பல் திருடர்களோடு சண்டை செய்ய வேண்டியது வெகு சகஜமாயிருந்தது. இப்படி இவர் கப்பல் திருடர்களோடு சண்டை செய்வதில் முதன்மையாக இருந்தார். ஆனால் இவருடைய கப்பலும் இவர் பிடித்த கப்பலும் தீப்பற்றி எரியக் கடலில் குதித்து அங்கு மிதந்து கிடந்த கட்டையைக் கொண்டு உயிர் தப்பினர்.

இப்படி கப்பலில் போகும்போது வடக்கே ஐஸ்லாந்து தேசம் வரையிலும் போயிருந்தார். மேற்கூறிய ஆபத்து நேர்ந்ததும் போர்த்துக்கல் தேசத்துத் தலைநகரமாகிய லிஸ்பன் என்றபட்டணத்தில் குடியேறினர். அத்தேசத்துச் சீமாட்டி ஒருத்தியை மணந்தார். ஆனால் சமுத்திரத்தில் கப்பலில் போகவேண்டுமென்ற அவா அவரை விடவில்லை. அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் மேற்காகவே சென்றால் இந்தியாவுக்குப் போய்ச்சேரலாம் என்று நம்பினர். ஆனால் கப்பல் செய்யவும், அதனுடைய செலவுக்காகவும் ஏராளமான திரவியம் வேண்டியிருந்தது. இவ்வளவு திரவியம் ஒரு அரசனால்தான் கொடுக்க முடியும். தன்னுடைய

மனைவியின் உறவினர் மூலமாக அந்த தேசத்து அரசனிடம் தான் எழுதிவைத்த குறிப்புகளைக் காண்பித்தார். இவைகளைப் பார்த்து ஆலோசிக்க அவ்வரசன் மந்திரிகளில் சிலரை நியமித்தான். அவர்கள் இவரிடம் இருந்த குறிப்புகளையெல்லாம் வாங்கிக்கொண்டு இவர் அறியாமல் இவர் எந்த மார்க்கமாகப் போக நினைத்தாரோ அதே மார்க்கமாகத் தங்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கப்பலை அனுப்பினர்கள். அதனால் அவர் அத்தேசத்தரசனிடம் கோபம் கொண்டு ஸ்பெயின் தேசத்திற்குப்போய் அந்த தேசத்து அரசியின் உதவியை நாடினர். அந்த அரசியின் பெயர் இஸபெல்லா. அரசனின் பெயர் பெர்டினண்டு. ஆனால் அவர்களுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை வரும்படி செய்ய அவருக்கு ஏழு வருஷங்கள் பிடித்தன. கடைசியாக அவருடைய நாற்பத்தேழாவது வயதில் 1492-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் ஒரு பெரிய கப்பலும் இரண்டு சிறு கப்பல்களுமாக மூன்று கப்பல்களுடன் புறப்பட்டார். எழுபத்தோர் நாள் சமுத்திரத்தில் தரையையே காணமல் சென்று அக்டோபர் மாதம் 12-ம் தேதி பஹாமா என்ற தீவு போய்ச் சேர்ந்தார். கப்பல் புறப்பட்ட நாற்பத்தொன்பதாம் நாளே கப்பலில் இருந்தவர்கள், இவரைக் கொன்றுவிட்டு வீடு திரும்பலாமென்று கலகம் செய்ய ஆரம்பித்தனர். ஆனால் அவர்களைச் சமாதானப்படுத்தித் தன்வழித் திருப்பினர். 1493-ம் வருஷம் ஸ்பெயின் தேசத்திற்குத் திரும்பி வந்து மறுபடியும் மேற்கே சென்றார். இம்மாதிரி இவர் நான்கு தரம் அமெரிக்கா வரையில் போனர். முதன் முதலாக மேற்கே ஒரு பெரிய நிலபாகம் இருக்கிறதென்று கண்டு

பிடித்த ஐரோப்பியர் இவரே. அந்தக் காலத்தில் கப்பலோட்டுவது இந்தக் காலம்போல் சுலபமானதல்ல என்பதை யோசிக்கும்போது அவர் எவ்வளவு கஷ்டப் பட்டார் என்பதைச் சொல்ல முடியுமா? இவ்வளவுக்கும் அவருக்குத் துணையாயிருந்தது அவருடைய மனோதைரிய மல்லவா? இவர் 1506-ம் வருஷம் மே மாதம் 20-ம் தேதி உயிர் நீத்தார்.

3. வைத்திய சிகிச்சை.

உங்கள் ஊர்களில் வைத்தியர்கள் இருக்கிறார்களென்று நம்புகிறேன். ஒவ்வொரு ஊரிலும் வியாதியைப் போக்க ஒரு வைத்தியன் அவசியந்தான். வியாதியே வராமற் பாதுகாப்பது வெகு நலமே. நாம் எவ்வளவு ஜாக்கிரதை யாக இருந்தாலும் சில சமயங்களில் வியாதிகள் வந்தே தீரும். இவ்வியாதிகளைப்போக்க மருந்து சாப்பிடவேண்டியிருக் கிறது. வியாதியின் காரணத்தை அறிந்து அவ்வியாதி யைப் போக்குவதே வைத்தியரின் சிறந்த முறையாகும். பழைய காலத்தில் சாதாரண வியாதிகளுக்கு ஒவ்வொரு ஊரிலும் ஓர்வயது முதிர்ந்த கிழவரோ, கிழவியோ, சிலஇலை களைப்போட்டு கிஷாயம் வைத்துக்கொடுத்து வந்தார்கள். அவர்களால் முடியாமற் போனபொழுதே வைத்தியன் ஒருவன் வருவான். நம் தேசத்திலுள்ள வைத்தியர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஸமஸ்கிருதபாஷையில்

எழுதியுள்ள புஸ்தகங்களில் சொல்லியபடி மூலிகைகளின் மூலமாய் வைத்தியம் செய்பவர்கள் ஆயுர்வேதிகள் எனப் படுவர். பூரம், வீரம், லிங்கம் இத்தகைய வஸ்துக்களைச் சுத் தம் செய்து, அவைகளால் வியாதிகளை சொஸ்தம் பண்ணு பவர் சித்த வைத்தியர்கள். உங்கள் வீட்டில் ஜுரம் காணும் பொழுது மாத்திரையைச் சந்தனக்கல்லில் குழைத்து தேனில் கொடுப்பது சித்த மாத்திரைகளே. மஹம்மதியர் அனுசரிக்கும் முறை யுனனி. இம்மூன்று வகையே இந்தி யாவின் பழைய முறைகள். இவைகளிலும் கடைசியிற் சொன்னது மஹம்மதியர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகே ஏற்பட்டது.


இப்பொழுது ஐரோப்பியவகை மருந்துகளும் உண்டு. இவைகளுக்கு மேற்குமுறைமருந்துகள் என்று சொல்ல லாம். இதை ஆங்கிலத்தில் 'அலோபதிக்' என்பார்கள்.

சில சமயங்களில் கை கால் சிலருக்கு முறிந்துவிடும்; அல்லது பெரும் பிளவைகள் தேகத்தில் உண்டாகும்; அல் லது சதை அழுகிப்போம். பழையகாலத்தில் நம்தேசத் தில் இப்பேர்ப்பட்ட சமயங்களில் முறிந்த எலும்புகளை ஒன் ருக வைத்துக் கட்டுக்கட்டுவது குயவர்கள்தான். பிளவை களை அறுப்பதும், இரணங்களை ஆற்றுவதும் நாவிதர்களே. அவர்கள் இரணவைத்தியம் செய்வதில் சமர்த்தராக இருந்தார்களாம். இப்பொழுது அநேக ஊர்களில் அலோ பதிக் வைத்தியம் செய்ய ஆசுபத்திரிகள் ஏற்படுத்தி யிருக்கிருர்கள். அவ்வாசுபத்திரிகளில் ஜுரம் முதலிய வியாதிகளுக்கு மருந்து கொடுப்பதுடன் இரணவைத்திய மும் செய்கிருர்கள்.

இரணவைத்தியம் செய்யும்பொழுது வியாதியஸ்தனுக்கு எவ்வளவு கஷ்டம் என்பதை நினைத்துப்பார். எலும்புகளைக் கெட்டியாய்க் கட்டுகிறபொழுது வியாதியஸ்தன் கை கால்களை உதறிக்கொண்டு வைத்தியனிடமிருந்து தப்ப முயல்வானல்லவா? அவன் அசையாமல் இருக்கும் பொருட்டுக் கைகளையும், கால்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுவார்கள், அல்லது கெட்டியாகக் கட்டிவிடுவார்கள். "புண்ணில் கோலிடாதே" என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கோலிடுவதே கஷ்டமாயின் கூரிய ஆயுதத்தை உள்ளே செலுத்தினல் எப்படி இருக்குமென்று யோசியுங்கள். அவ்வியாதியஸ்தர்கள் தங்களை விட்டுவிடும்படி மன்றுடுவார்கள்.

ஆசுபத்திரிகளில் அந்நோய் தெரியாமலிருக்கும்படி ஓர் மயக்கத்தை வியாதியஸ்தனுக்கு உண்டாக்குகிருர்கள். அது ஒருவித வாயு. அதை வியாதியஸ்தனை முகரச் செய்கிருர்கள். அதை முகர்ந்த சற்றுநேரத்திற்கெல்லாம் ஞாபகம் போய் விடுகிறது. பிறகு இரணவைத்தியர் தனக்கு வேண்டியபடி செய்வார். வியாதியஸ்தன் கைகால்களை அசைக்கமாட்டான். அவனுக்கு நோயும் தெரியாது. எவ்வளவு சுலபமாக ஆய்விட்டதென்பதைக் கவனியுங்கள்.

இம்மயக்கமருந்தைக் கண்டுபிடித்த பெரியார் ஜேம்ஸ் சிம்ஸன் என்பவர்.



4. ஆகாயவிமானம்.

கருடன், வல்லூறு முதலிய பறவைகள் ஆகாயத்தில் பறக்கும்பொழுது நமக்கும் பறக்க ஆசை உண்டாகின்றதல்லவா ? நமக்கும் சிறகுகள் இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும் என்று நாம் எண்ணுகிருேம். பழைய காலம்முதல் அநேகர் பறக்கப் பிரயத்தனப்பட்டார்கள். பறவைகளைப்போல் தாங்களும் சிறகுகள் கட்டிப் பறக்கப் பார்த்தார்கள். நம் தேசத்திலுள்ளதுபோல் பல்வேறு தேசங்களிலும் பல கதைகளில் மானிடர் ஆகாயத்தில் பறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நம் தேசத்தில் இராவணன் என்னும் இராக்கதன் இலங்கையிலிருந்து சீதையைத் தூக்கிச்செல்ல வந்ததும், அவளைத் தூக்கிச் சென்றதும், ஆகாய விமானத்தில் என்று எழுதப்பட்டுள்ளது. ஆகாயவிமானம் அக்காலத்தில் இருந்ததோ இல்லையோ என்பதை நம்மால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனுல், அக்காலத்திலேயே மனிதர்கள் ஆகாயத்தில் பறக்க ஆசைகொண்டார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்லலாம்.

பலநாட்கள் சென்றபின்பு புகைக்கூடுகளைக் கட்டி அவைகளின் உதவியால் பறக்கக் கூடும் என்று அறிந்தார்கள். நீங்கள் உற்சவகாலத்தில் ஆகாயத்தில் காகிதப் புகைக் கூடுகள் காற்றடிக்கும் திக்கில் செல்லுவதைப் பார்த்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நம் வீடுகளில் புகை எப்படிப் போகிறதென்பதைப் பாருங்கள். அது தீயின் மேற்புறமாகச் செல்லுகிறது. என் தெரியுமா? உஷ்ணக் காற்று குளிர் காற்றைக் காட்டிலும் இலேசு. தண்ணீரில் சடை மிதப்பதுபோலச் சுற்றியுள்ள பளுவான காற்றில் இலேசான புகைக்கூடு மிதந்து காற்று அடிக்கும் திசையில் செல்லுகிறது.

வாயுக்கள் பல உண்டு. சில வாயுக்கள் சாதாரண வாயுவைக்காட்டிலும் இலேசு. ஆகையால் அவ் வாயுவைப் பெரிய பைகளில் கட்டிவிட்டால், அது அப் பைகளைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் மிதந்து செல்லும். அக் கூடுகளின்கீழ்ச் சிறிய தொட்டிலொன்றைக் கட்டிவிட்டால் அத்தொட்டிலையும் தூக்கிச் செல்லும். அத்தொட்டிலில் மனிதர்கள் உட்கார்ந்து போகலாம். இப்படித்தான் முதலில் தைரியசாலிகள் பறந்தார்கள்.

ஆனல் இதிலுள்ள ஓர் அபாயம் நீங்கள் யோசித்தால் உங்களுக்குத் தெரியும். காற்று மாறி அடிக்கும் பொழுது புகைக்கூடும் அத்திசையிலேயே திரும்பும். அதை நமக்கு வேண்டிய திக்குகளில் திருப்புவது முடியாத காரியம். அதைத்திருப்பச் சுக்கான்கள் அமைக்கப் பிரயத்தனப் பட்டார்கள்.

பிறகு ஆகாய விமானங்கள் வேறுவிதம் கட்டப் பட்டன. அவை காற்றைக் காட்டிலும் பளுவானவைகளே. என்றாலும் அவ்விமானங்கள் காற்றில் செல்லுகின்றன. இன்னொரு அதிசயமும் இதில் உண்டு. புகைக்கூடுகள் காற்றடிக்கும் திக்கிலேயே செல்லும். ஆனால் இவை களோ, எத்திக்கில் வேண்டுமானாலும் செல்லக் கூடும். நாம் நீந்தும்பொழுது தண்ணீரை நம் பின்பக்கமாகத் தள்ளு வதுபோல ஆகாய விமானத்தின் முன்பக்கமிருக்கும் ஒரு சக்கரம் வெகு வேகமாய்ச் சுழன்று காற்றைப் பின்பக்கம் தள்ளுகிறது. அதனால் ஆகாய விமானம் செல்லுகிறது.

5. வெனிஸ் வர்த்தகன் I.

இந்தியாவில் சமஸ்கிருதத்தில் நாடகம் எழுதினவர்களில் பெரியவர் காளிதாஸன் என்பவர். அவர் எழுதிய நாடகங்களில் மிகப் பிரசித்தமானது சாகுந்தலம். அப்படியே ஆங்கிலத்தில் நாடகம் எழுதிய பிரபலர் ஷேக்ஸ்பியர். இவர் எலிஸபத் என்னும் ஓர் அரசி இங்கிலாந்தை ஆண்டபொழுது இருந்தவர். இவர் எளிய குடும்பத்தில் இங்கிலாந்தில் ஆவான் என்னும் நதிக்கரையில் உள்ள 'ஸ்ட்ராட்போர்ட்' என்னும் ஊரில் பிறந்தவர். இவர் சிறு வயதில் ஓர் மான் திருடிவிட்டதாகவும் அதற்காக அவர் சிக்ஷையடைந்தாரென்றும் ஓர் கதையுண்டு. இவர் நாடகங்கள் ஆங்கிலபாஷை நடமாடும் இடமெல்லாம் வெகு உயர்வாகக் கொண்டாடப்படுகின்றன. இவர் பல நாடகங்கள் எழுதியுள்ளார். இந்தியாவிலுள்ள நாடகங்களுக்கும் இவர் எழுதிய நாடகங்களுக்கும் சிற்சில வித்தியாசங்கள் உண்டு. இந்தியாவிலுள்ள நமக்கு எக்கதையின் முடிவும் சுபமாகவே இருப்பதில் சந்தோஷம். ஆனால் இவர் நாடகங்களில் பல, முடிவில் விசனமாகவே முடியும். சுபமாக முடியும் நாடகங்களில் ஒன்று 'வெனிஸ் வர்த்தகன்'.

ஐரோப்பாவின் தென்பக்கத்தில் இத்தாலி என்னும் ஓர் தேசமுண்டு. அதில் வெனிஸ் என்னும் நகரம் ஒன்று வியாபாரத்தில் பிரசித்திபெற்றிருந்தது. அந்நகரில் அந்தோனியோ என்னும் ஓர் கிறிஸ்தியனும் ஷைலக் என்னும் ஒரு யூதனும் பெரிய வியாபாரிகளாக இருந்தார்கள். ஷைலக் என்பவன் தன் பணத்தை அதிக

வட்டிக்குக் கொடுத்துப் பணத்தை விருத்தி செய்தான். ஆனால் அந்தோனியோ வேண்டுபவர்களுக்கு வட்டி யில்லாமலே கடன் கொடுப்பது வழக்கம். ஆகையால் அந்தோனியோவிடம் ஷைலக்கிற்கு விரோதம் உண்டாயிற்று. சமயம் கிடைத்தபொழுது அந்தோனியோவைக் கொல்ல வேண்டுமென்று நினைத்தான். அந்தோனியோவும் ஷைலக்கை வாயில் வந்தபடி திட்டுவான்.

அந்தோனியோவிற்குப் பஸ்ஸானியோ என்னும் ஒரு சிநேகன் இருந்தான் அந்நண்பன் வெகு அழகு வாய்ந்த போர்ஷியா என்னும் ஒரு செல்வவதியை மணக்க எண்ணங்கொண்டான். அவளைக் கலியாணம் செய்து கொள்ள முயன்றவர்கள் பலர். ஆகையால் பஸ்ஸானியோ அவளிடம் செல்லச் சில ஆடம்பரங்கள் செய்யவேண்டியிருந்தன. அவன் ஏழையாதலால் சிநேகனை அந்தோனியோவைத் தனக்குச் சிறிது தனசகாயம் செய்யும்படி கேட்டான்.

அச்சமயம் அந்தோனியோவிடம் பணம் இல்லை. அவன் கப்பல் வியாபாரியாதலால் அவன் சரக்குகளெல்லாம் வெளியூர்களுக்குச் சென்றுவிட்டன.

ஆகையால் தன் விரோதியான ஷைலக்கைத் தனக்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும்படிக் கேட்டான். ஷைலக் அதுவே அந்தோனியோவை வஞ்சிக்கத்தக்க சமயமென்று நினைத்தான். நல்லவன்போல் பாசாங்குசெய்து தனக்கு வட்டி வேண்டியதில்லையென்றுகூறி குறித்த தவணைக்குள் அந்தோனியோ பணத்தைத் திருப்பிவிட வேண்டுமென்றும், தவணை தவறினால் அந்தோனியோவின்

உடலிலிருந்து ஷைலக் அவனுக்கு வேண்டிய இடத்தில் ஒருசேர் மாமிசம் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அந்தோனியோ எழுதிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னான்.

அந்தோனியோ மூன்று மாதத்தவணை போதுமென்றான். ஏனெனில் அதற்குள் தன் கப்பல்கள் ஏராளமான பணத்தோடு திரும்புமென்று நிச்சயமாக எண்ணினான். ஆகையால் ஷைலக்கின் இஷ்டப்படி எழுதிக்கொடுத்தான்.

பஸ்ஸானியோ அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு போர்ஷியாவிடம் போய்ச்சேர்ந்தான். பஸ்ஸானியோ போர்ஷியாவை மணந்தான். மூன்று மாதங்கள்கழிந்தன.

6. வேனிஸ் வர்த்தகன் II.

அந்தோனியோ நினைத்தபடி அவன் கப்பல்கள் திரும்பவில்லை. ஆகையால் ஷைலக் தன் பத்திரப்படி அந்தோனியோவின் தேகத்திலிருந்து ஒரு சேர் மாமிசம் வேண்டுமென்முன். அவன் மார்பிலிருந்துதான் மாமிசம் வேண்டுமென்முன். அப்படிச் செய்தால் அவன் இறந்து விடுவான் என்பது நிச்சயம். அந்தோனியோ அச்சேதியைப் பஸ்ஸானியோவிற்குத் தெரிவித்தான்.

இவ்விஷயத்தை அறிந்த போர்ஷியா தன் கணவனிடம் பணப்பை ஒன்றைக்கொடுத்து அந்தோனியோவை மீட்கும்படி அனுப்பினுள்.

தனக்குச் சேரவேண்டிய மாமிசத்தைக் கொடுக்கும்படிச் செய்ய, ஷைலக் நியாயஸ்தலத்தில் பிரியாது செய்தான். பஸ்ஸானியோ ஷைலக்கிற்கு அவன் கொடுத்த பணத்தினும் மும்மடங்கு நான்குமடங்கு கொடுப்பதாகவும் சொன்னுன். ஆனுல் ஷைலக்கோ பத்திரத்தின்படியேதான் அடைய வேண்டுமென்முன்.

போர்ஷியா மாறுவேஷம் பூண்டு ஓர் வக்கீல்போல் அந்த நியாயஸ்தலம் வந்தாள். அவளை இன்னுரென்று பஸ்ஸானியோவிற்கே கண்டுபிடிக்க முடியவில்லை. முதலில் ஷைலக்கிற்கு அனுகூலமாகவே பேசினுள். ஷைலக் அவளைப் புகழ்ந்தான். ஆனுல் கடைசியில் ஷைல்க் ஒரு துளி இரத்தமும் சிந்தக்கூடாதென்றும் ஒரு சேருக்கு ஒரு துளி குறைவாகவாவது அதிகமாகவாவது அறுக்கக் கூடா

தென்றும் சொன்னுள். பத்திரத்திலுள்ளபடிதான் ஷைலக் அடையப் பாத்தியதை உண்டென்றுள்.

இரத்தம் சிந்தாமல் மாமிசம் கொள்ளமுடியாதாகையால் பணத்தைக் கொடுத்தால் போதுமென்று ஷைலக் வேண்டினுன். ஒருவனைக் கொல்ல முயன்றதால் அப்பணம் அவனுக்குக் கிடைக்காதென்றும், அவன் அந்தோனியோவைக் கொல்ல முயன்றதால் ஷைலக்கின் பணத்தில் பாதி அந்தோனியோவிற்கும், மற்றப் பாதி ராஜ்யத்திற்கும் சேர வேண்டுமென்றும் தீர்மானமாயிற்று. அவன் பொருளிழந்து வாடினமுகத்துடன் வீடு திரும்பினன். பிறகு பஸ்ஸானியோ தன் நண்பன் உயிரைக் காப்பாற்றியது தன் மனைவியென்று அறிந்து சந்தோஷப்பட்டான்.



7. கோபால கிருஷ்ண கோகலே.

ஒவ்வொரு நகரத்திலும், தாலுக்காவிலும் நகரபரிபாலன சபையாரும் தாலுக்கா போர்டாரும் சிறுவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்படிச் சிறுவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி போதிக்க வேண்டுமென்று உயர்தரச் சட்ட சபையில் வற்புறுத்தியவர் கோபால கிருஷ்ண கோகலே என்ற பெரியாரேயாவர்.

இவர் 1866-ம் வருடத்தில் கோல்ஹாப்பூர் என்ற ஊரில் பிறந்தார். இவர் மராட்டிய பிராமணர். இவருடைய

தாய் தந்தையர் மிகவும் ஏழைகள். அன்றியும் இவரது இளவயதிலேயே தந்தையை இழந்தார். அதனால் சற்றும் மனந்தளராமல் வறுமையின் கொடுமையையும் பாராட்டாமல் ஊக்கத்துடன் எல்பின்ஸ்டன் கலாசாலையிலும், டெக்கான் கலாசாலையிலும் படித்து 1885-ம் வருஷம் பி. ஏ. பட்டம் பெற்றார்.

இவர் பி. ஏ. பட்டம் பெற்ற வருஷம் பூனா நகரத்தில் பெர்குஸன் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. அக்கலாசாலையில் ஆங்கிலமும், கணக்கும் போதிக்க ஆசிரியராக அமர்த்தப்பட்டார். இவருக்குத் தேச சரித்திரத்திலும் பொருளாதார சாஸ்திரத்திலும் விசேஷ ஞானம் இருந்தது. இவரிடத்தில் ஆங்கில பாஷையில் இருந்த பயிற்சியும், பேசுந்திறமையும், கடினமான விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்துகொள்ளும்படியாகச் செய்யும் முறையும் மெச்சத்தகுந்தவையாயிருந்தன. இவரை எல்லா மாணவர்களும் கொண்டாடினார்கள். பெர்குஸன் கலாசாலைக்குச் செய்த இவரது ஊழியமே இவரை என்றும் போற்றச்செய்தது.

இவர் பம்பாய் சட்டசபையிலும், உயர்தர சட்ட சபையிலும் அங்கத்தினராக இருந்தார். இம்மாதிரி பதினான்கு வருஷம் இச்சபைகளில் உழைத்தார். காங்கிரஸ் மகாநாட்டிலும் 1905-ம் வருஷம் அக்கிராசனம் வகித்துக் கக்ஷிகளுக்குள் ஸமரஸமேற்படுத்தினார்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் சரிவர நடத்தப்படவில்லை என்பதைக் கேட்டு, நம் நாட்டார்களுக்காக சட்ட சபைகளில் வெகுதூரம் பரிந்து பேசினார். அவர்களுடைய கஷ்டங்களை நீக்க வெகு பாடுபட்டார். தன்னுடைய தேக

சௌக்கியத்தையும் பாராமல் விஷயங்களை நேரே தெரிந்து கொண்டுவரத் தென்னாப்பிரிக்காவுக்கும் சென்றார்.

தேசப்பொருளாதார முன்னேற்றத்திற்காக வேண்டிய முறைகளை ஜனங்களுக்குப் போதிக்கவும், வறுமை, பஞ்சம், வெள்ளம்முதலியவைகள் வரும்போது உதவிசெய்வதற்கும், இந்திய ஊழியச்சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். அதற்கு, முதல் அக்கிராஸனரும் அவரே. தேச சேவையை முன்னிட்டு இங்கிலாந்துக்குப் பலமுறை சென்றுவந்தார். தேசசேவையில் ஈடுபட்டவருக்கு தேகசௌக்கியத்தைக் கவனிக்கச் சாவகாசம் எது? வரவர வலிமை குன்றி 1917-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ம் தேதி விண்ணுலகை அடைந்தார். அவருடைய மரணத்திற்கு வருத்தப்படாதார் எவருமில்லை. இந்தியர்களும் ஐரோப்பியர்களும் ஒருங்கு சேர்ந்து அவருடைய மரணத்திற்கு வருந்தினார்கள். ஆனால் அவருடைய பூதவுடலே அழிந்தது; அவர் புகழுடம்போ, மென்மேலும் பிரகாசித்து விளங்குகின்றது.

8. மண்ணெண்ணெய்.

மண்ணெண்ணெய் பூமியினின்றும் வெட்டி எடுக்கப்படும் ஒருவித எண்ணெய். இதில் பெட்ரோல் முதலிய அநேக வகைப்பட்ட எண்ணெய்கள் கலந்திருக்கின்றன. ஆகையால், முதன் முதலில் இந்த எண்ணெயை பூமியிலிருந்து வெளியில் எடுக்கவேண்டும். பிறகு இதில் கலந்துள்ள எண்ணெய்களைப் பிரித்தெடுக்கவேண்டும்.

சாதாரணமாக இவ்வித எண்ணெயின் உபயோகம் விளக்கு எரியவிடுவதேயென்று நினைக்கிறோம். ஆனால் விளக்குக்கு உபயோகப்படுத்துவது உலகத்தில் உற்பத்தியாகும் எண்ணெயின் கொஞ்ச பாகமே.

இந்த எண்ணெய், மெழுகுவர்த்தி செய்யவும், மின்சார விளக்குகளுக்கு உபயோகப்படுத்தும் கரித்துண்டுகள் செய்யவும், மற்றும் நானுவித வேலைகளுக்கும் சாதனமாய் இருக்கிறது. அன்றியும் இயந்திரங்கள் தேய்ந்து போகாமலிருப்பதற்கும், மோட்டார்கள் ஓடுவதற்கும், ஆகாயத்தில் யந்திரங்கள் பறப்பதற்கும் இன்றியமையாததாயிருக்கிறது.

ஆகாயவிமானங்கள் மூலமாக மேலே பறக்க முடிந்தது இதனால்தான். பெட்ரோலினால் ஓட்டப்பட்ட என்ஜின்தவிர மற்ற என்ஜின்களை ஆகாயத்தில் பறக்கக்கூடிய அவ்வளவு இலேசாய் செய்ய முடியவில்லை. இதுதான் மண்ணெண்ணெயின் சிறந்த உபயோகம். மண்ணெண்ணெயினின்றும் சில வாசனைத் திரவியங்களும் செய்கிறார்களென்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா?

வீட்டில் மழையினால் ஓதம் சாராமல் இருப்பதற்கு உபயோகிக்கும் "அஸ்பால்ட்" என்று சொல்லப்படும் நிலக்கீலும், அச்சடிப்பதற்குப் பிரகாசம் குன்றாத அழியாத மையும் பல அழகான வர்ணங்களுள்ள சாயங்களும் இதினின்றுதான் கிடைக்கின்றன. விளையாட்டுப் பந்துகளும், ரப்பர் டயரும், ரப்பரினால் செய்யப்பட்ட எல்லாவித வஸ்துக்களும் இவ்வெண்ணெய் இல்லாவிட்டால் செய்ய முடியாது.

இவ்வளவு முக்கியமாக உபயோகப்படும் எண்ணெயைப்பற்றிப் பல வருஷங்களாக ஜனங்களுக்குத் தெரிந்திருந்தும் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்தான் இதை அதிகமாக எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதன்முதலாக அமெரிக்கா தேசத்தில் ஐக்கிய மாகாணத்தில் 1859-ம் வருஷத்தில் இந்த எண்ணெயை எடுக்க ஒரு கிணறு வெட்டப்பட்டது. இந்தக் கிணறு வெட்டின பிறகுதான் இவ்வெண்ணெய் எடுப்பதை ஒரு தொழிலாக நினைத்து சாஸ்திர நிபுணர்கள் மென்மேலும் யோசித்து பல இயந்திரங்களை இயற்ற ஆரம்பித்தார்கள்.

இந்த எண்ணெய் அமெரிக்காவில், ஐக்கிய மாகாணத்திலும், ஐரோப்பாவில் ருஷியா, ருமேனியா, ஆஸ்டிரியா, ஹங்கேரி என்ற தேசங்களிலும், ஆசியாவில், பெர்ஷியா, பர்மா தேசங்களிலும், கிழக்கு இந்தியத் தீவுகளிலும் ஏராளமாக எடுக்கப்படுகின்றது. இந்த எல்லா இடங்களிலிருந்தும் ஒரு வாரத்திற்குச் சராசரி பத்துலக்ஷம் டன் எண்ணெய் எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் இவ்வளவு எண்ணெய் எடுத்தபோதிலும் அநேக நூற்றாண்டுகளுக்கு இவ்வெண்ணெய்ப் பஞ்சம் வராதென்று நிபுணர்களால் சொல்லப்படுகிறது.

9. தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கி.

பிள்ளை :—இளஓநாய்க்குட்டியாகச் சேர்ந்தால் தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் நான்கு அணுவாவது சேர்த்து வைக்கவேண்டுமென்று ஆசிரியர் சொன்னரே! சேவிங்ஸ் பாங்கி என்றால் என்ன ? அப்பா !

தகப்பனர் :—நம்மிடத்திலிருக்கும் பணத்தைத் தபாலாபீஸில் கொண்டு கட்டிவைத்தால் அதை நமக்காகப் பத்திரமாக வைத்துவைக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுதான் சேவிங்ஸ் பாங்கி என்பது.

பிள்ளை :—தபாலாபீஸில் நாம் பணம் கட்டினேம் என்பதற்கு என்ன ஆதாரம் கொடுக்கிறார்கள் ?

தகப்பனர் :—நாம் கட்டின பணத்தை வரவு வைத்து தபால் முத்திரையும், போஸ்டுமாஸ்டர் கையெழுத்தும் இட்டு ஒரு புஸ்தகம் நமக்குக் கொடுப்பார்கள். அந்தப் புஸ்தகத்திற்குப் "பாஸ்புக்" என்று பெயர்.

பிள்ளை :—முதன் முதலாகப் பணம்கட்ட வேண்டுமானல் நாம் என்ன செய்யவேண்டும் ?

தகப்பனர் :—பணம் கட்டவேண்டிய ஒருவன் சேவிங்ஸ் பாங்கி வேலை செய்யும் தபாலாபீஸுக்குப் போகவேண்டும். சில தபாலாபீஸுகளில்தான் இந்த வேலை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்குள்ள உத்தியோகஸ்தரிடம்

தன்னுடைய பெயர், தகப்பன் பெயர், இருக்குமிடம் முதலிய தகவல்கள் கொடுக்க வேண்டும். பிறகு அந்த உத்தியோகஸ்தர் ஒரு அச்சடித்த காகிதத்தைக் கொடுப்பார். அதைப் படித்தபிறகு அதில் கையெழுத்துப்போடவேண்டும். "நான் சேவிங்ஸ்பாங்கி விதிகளைப் படித்துத் தெரிந்துகொண்டேன். அவ்விதிகளின்படி நடக்கிறேன். நான் என்னுடைய பெயரால் வேறெந்தத் தபாலாபீஸிலும் இதுவரையில் பணம் கட்டினதில்லை" என்று எழுதியிருக்கும். பிறகு பணத்தை வாங்கிக்கொண்டு மேற்சொன்னபடி "பாஸ் புக்" கொடுப்பார்கள்.

பிள்ளை :—பணம் எவ்வளவு வேண்டுமானாலும் தபாலாபீஸில் கட்டலாமா ? அப்பா !

தகப்பனார் :—நாலணாவுக்குக் குறைந்த தொகை கட்டக்கூடாது. ஒரு வருஷத்தில், அதாவது ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல், மார்ச்சு மாதம் முப்பத்தோராம் தேதிவரையில் ரூ. 750 தான் கட்டலாம். ஆனால் மொத்தம் 5000 ரூபாய்க்கு மேல் ஒருவன்பேரில் கணக்கு இருக்கக்கூடாது.

பிள்ளை :—பணத்தைத் திருப்பி வாங்கவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும் ?

தகப்பனார் :—பணம் திருப்பி வாங்கவேண்டுமானால் அதற்கென்று ஒரு தனி நமூனா இருக்கிறது. அதை

எழுதிக்கொண்டு பாஸ்புக்கையும் கொடுத்தால் பணம் கொடுப்பார்கள்.

பிள்ளை :—நாம் வேற்றூருக்குப் போனால் என்ன செய்கிறதப்பா?

தகப்பனர் :—அந்த ஊர்த் தபாலாபீஸில் கொண்டுபோய் பாஸ்புக்கைக்கொடுத்து நம்முடைய விலாசத்தையும் கொடுத்தால் அந்த ஊருக்கு நம்முடைய கணக்கை மாற்றுவார்கள். பிறகு அந்த ஊர் தபாலாபீஸிலேயே பணம் கட்டவும் வாங்கவும் முடியும்.

பிள்ளை :—பாஸ்புக் தொலைந்துபோனால் என்ன செய்கிறது?

தகப்பனர் :—ஒவ்வொரு பாஸ்புக்கிலும் ஒரு நெம்பர் உண்டு. அந்த நெம்பரையும் குறித்து ஒரு ரூபாய் கட்டினால் வேறு புதிய புஸ்தகம் ஒன்று நமக்குக் கொடுப்பார்கள்.

பிள்ளை :—தபாலாபீஸில் பணம் கட்டுவதால் என்ன பிரயோஜனம்? அப்பா!

தகப்பனர் :—பணம் பத்திரமாக இருக்கும். நமக்கு வேண்டும்போது பெற்றுக்கொள்ளலாம். வருஷா வருஷம் வட்டி கிடைக்கும். தபாலாபீஸ் வேலை அரசாங்கத்தாராலேயே செய்யப்படுவதால் நம்முடைய பணத்தை இழக்கவே மாட்டோம். மேலும் வாரத்திற்கொரு முறைதான் பணத்தை வாங்கலாமாகையால் கட்

டின பணத்தை மத்தியில் வாங்கவும் முடியாது. இது சிக்கன முறைக்குமிகவும் அவசியமானது. ஆகையால் சிறுவர்களாயிருக்கும்போதே சிக்கனமாக இருந்து பணம் தபாலாபீஸில் கட்டும் வழக்கத்தை வைத்துக்கொண்டால் பெரியவர்களாகும்போது இந்த வழக்கம் நமக்கு நல்ல நன்மையைத்தரும். அதனாலேயே சிக்கனமுறையைப் பயில்விக்கச் சாரண இயக்கத்திலும் இளஓநாய்க் குட்டிமுதல் ரோவர் சாரணன்வரையில் தபாலாபீஸில் பணம் சேர்த்து வைக்கவேண்டுமென்ற நிபந்தனையை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

பிள்ளை :—அப்பா! இப்பொழுதுதான் பணம் கட்டுவதின் நோக்கம் நன்கு விளங்கிற்று. இனி நீங்களோ, அம்மாவோ எனக்குக் கொடுக்கும் சில்லறையைச் சேர்த்துவைத்துத் தபாலாபீஸில்தான் கட்டப்போகிறேன். கடையில் தேக ஆரோக்கியத்திற்குக் குறைவான தின்பண்டங்களேயோ உபயோகமற்ற விளையாட்டுச் சாமான்களேயோ வாங்கிப் பணத்தை வீணாக்காமல் இருக்கப்போகிறேன்.

தகப்பன் :—நீ அப்படிச் செய்தால் எனக்கு நிரம்ப சந்தோஷமே.



10. தாவரங்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் விதம்.

தாவரங்கள் மனிதனுக்கும், சாகபக்ஷணிகளுக்கும் முக்கிய உணவாக இருக்கின்றன. மனிதன் பகுத்தறிவுள்ளவனுதலால் தாவரங்களைக்கொல்லும்போது மற்றோரிடத்தில் அவைகளை வளர்த்துக் கொண்டே வருகிறான். ஆனால் பிராணிகளோ அப்படிச் செய்யமுடியாதவை. ஆகையால் அவைகள் தாவரங்களுக்கு அதிகக் கேட்டை விளைவிக்கின்றன. அதனல் தாவரங்கள் அழிந்தேபோகலாம். இப்படி அழிந்துபோகாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தாவரங்களில் சில உறுப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. மனிதனுக்குப் பகைவனிடம் சண்டையிட எப்படி கைகளும், கால்களும், ஆயுதங்களுமிருக்கின்றனவோ, அதேமாதிரி தங்

கள் பகைவர்களினின்றும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள பிராணிகளுக்குக் கொம்புகளும், கால்களும், வாலும் இருக்கின்றன. இம்மாதிரியே தாவரங்களுக்கும் சில உறுப்புகள் அமைந்திருக்கின்றன. சில தாவரங்கள் தங்களுடைய விரோதிகளினின்றும் காப்பாற்றிக்கொள்ள முட்கள் உடையனவாயிருக்கின்றன. எப்பொழுதும் தாவரங்களின் இலைகளையே எல்லாப் பிராணிகளும் புசிக்கும். அதற்காகவே சில இலைகள் முட்களடர்ந்திருக்கின்றன. சில இலைகள் ஊசிபோல் நீளமாக வளர்ந்திருக்கின்றன. அவைகளைப் பிராணிகள் தின்ன யத்தனித்தால் அவைகளின் நாக்குகளை அறுத்துவிடும். ஆகையால் இம்மாதிரியான செடிகளிடம் பிராணிகள் நெருங்கா.

சில தாவரங்களுக்கு இலைகளில் ஒருவித விஷ சத்து இருக்கும். இவ்விலைகளைத் தின்றால்பிராணிகளுக்கு ஆபத்து வரும். இப்படி ஆபத்துவரும் என்று வாயில்லாப் பிராணிகள் தங்களுடைய இயற்கை அறிவால் கண்டு அவைகளைத் தின்னுவதுமில்லை, தின்ன யத்தனிப்பதும் இல்லை.

பிராணிகள் இலைகளில் உப்புச்சத்துகள் அதிகமாக இருந்தால் அவைகளை அணுகுவதில்லை. ஏனென்றால் அவை அவ்வளவு உருசியாக இருக்கமாட்டா. சில செடிகள் இம்மாதிரி உப்புச்சத்து அதிகமாயிருக்கும் இலைகளோடு அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவும் அவைகளுக்கு ஒரு பாதுகாப்பல்லவா?

சில செடிகளின் இலைகளைக் கிள்ளும்போது அவைகளினின்றும் ஒருவித பால்உண்டாகின்றது. இந்தப் பால் மனிதன் அல்லது வேறு பிராணியினது உடலில்பட்டால்

அவ்விடத்தில் புண்ணுகும். இம்மாதிரியானபால் இவைகளுக்கு ஒரு பாதுகாப்பாயிருக்கிறது.

வேறு சில செடிகள் அவைகளைத் தொடும்போது தேள் கொட்டுவதுபோல் கொட்டுகின்றன. பார்ப்பதற்கு அழகாகவும் மிருதுவாகவும் இருக்கும். இச்செடிகளுக்குக் கடவுள் இம்மாதிரியான ஆயுதத்தைக் கொடுத்திருப்பது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கின்றது!

சில செடிகளின் இலைகளில் ஒருவித துர்க்கந்தம் வீசுகின்றது. இத்தகைய துர்க்கந்தம் மனிதனுலும் பிராணிகளாலும் விரும்பப்படுகிறதில்லை. ஆகையால், அவைகளின் பகைவர்களினின்றும் தப்பித்துக்கொள்ள இத்துர்க்கந்தம் அவைகளுக்கு உதவியாயிருக்கிறது. மற்றும் சில செடிகள் தங்களுடைய உதவிக்காக எறும்பு முதலியவைகளைச் சினேகித்து அவைகளுக்கு இருப்பிடமாக இருந்து, அவைகளால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுகின்றன. நாம் எப்படி சேவகர்களுக்குச் சாப்பாடுபோட்டு நம்மைக் காப்பதற்கு வைத்துக் கொள்ளுகிறேமோ, அதேமாதிரி இந்தச் செடிகள் வேறு சிறு பிராணிகளைச் சேவகர்களாக வைத்துக்கொண்டிருக்கின்றன.

இதை எல்லாம் நோக்கும்போது கடவுளின் அன்பும், அவருக்குத் தன் சிருஷ்டியின் பாதுகாப்பில் இருக்கும் பொறுப்பும் எவ்வளவு நன்ருக வெளிப்படுகின்றன!

11. ஆர்கிமிடீஸ். (Archimedes)

ஐரோப்பாக் கண்டத்தின் தென்பாகத்தில் மத்திய தரைக்கடல் என்றோர் கடல் உளது. அக்கடலில் இத்தாலி தேசத்தின் தென்பாகத்தில் ஸிஸிலி என்று ஒரு தீவு இருக்கிறது. வெகு நாட்களுக்கு முன் ஸிஸிலி நாகரீகத்தில் முற்பட்டிருந்தது. அப்பொழுது ஸைராகியூஸ் என்ற பட்டணம் ஸிஸிலிக்குத் தலைநகராயிருந்தது.

இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்குமுன் இந்தப் பட்டணத்தில் ஆர்கிமிடீஸ் என்ற தத்துவ சாஸ்திரி பிறந்தார். இவர் கணிதத்திலும், பௌதிக சாஸ்திரத்திலும் நல்ல பயிற்சியுடையவர். மேலும் இவரை அத்தேசத்தரசன் நேசித்து வந்தான். அவன் இவரை நேசித்ததற்குக் காரணம் சண்டை செய்வதற்கும், கீழிருந்து மேலே ஜலமெடுக்கவும் நவீன கருவிகள் இவர் இயற்றியதேயாகும்.

இப்படியிருக்க, ஒருநாள் அரசன் ஓர் ஆலயத்திற்காக அழகான ஒரு பொற்கிரீடம் செய்வித்தான். பொற்கொல்லன் அரசன் விரும்பியவாறு கிரீடம் வெகு அழகாகச் செய்து முடித்தான். அதன் நிறையும் அரசன் கொடுத்த பொன்னின் நிறைக்குச் சரியாக இருந்தது. ஆனால் அந்தத் தட்டான் அரசன் கொடுத்த பொன்னைக் கொஞ்சம் அபகரித்து அதற்குப் பதிலாக வெள்ளியைக் கலந்ததாக அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரசன் இதற்குத்தக்க ஆதாரம் இல்லாமையால் இதை நம்ப மறுத்தானயினும், சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள ஆசைப்பட்

டான். உடனே தன் சிநேகிதனுன ஆர்கிமிடீஸை வரவழைத்து இதன்உண்மையை அறியும்படி கட்டளையிட்டான்.

ஆர்கிமிடீஸ் வெகுநாள் யோசித்தும் அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கிரீடத்தை உருக்கிக் கட்டியாகச் செய்தால் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாமென்று நினைத்தான். ஆனுல் கிரீடம் வெகு அழகாகச் செய்யப்பட்டிருந்தமையால் அதை உருக்க அவனுக்கு மனம் வரவில்லை.

ஒருநாள் அவன் ஸ்நானம்செய்ய வழக்கம்போல் அவ்வூரிலுள்ள தண்ணீர் நிறைந்த தொட்டியில் இறங்க, அத்தொட்டியினின்றும் தண்ணீர் வழிந்தோடுவதைக் கவனித்தான். அப்படி ஓடிய தண்ணீரை அளந்தால் அது தன்னுடைய கன அளவுக்குச் சமமாயிருக்கும் என்ற உண்மை விளங்கிற்று. உடனே உடம்பையும் துடைத்துக் கொள்ளாமல் "நான் தெரிந்து கொண்டேன்; நான் தெரிந்து கொண்டேன்" என்று கூவிக்கொண்டு தெருவில் ஓடினதாக ஒரு கதை உண்டு.

உடனே தண்ணீர் நிறைந்த ஒரு பெரிய பாத்திரத்தை எடுத்து அதில் கிரீடத்தை அமிழ்த்தி வழிந்த தண்ணீரை அளந்து கொண்டான். அந்தக் கிரீடத்தின் நிறையுள்ள பொன்னையும், வெள்ளியையும் தனித்தனியே எடுத்து அவைகளின் அளவையும் மேற்கூறியபடி அளந்து கொண்டான். கிரீடம் சுத்த பொன்னுயிருந்தால் அதே நிறையுள்ள பொன்னின் கன அளவுக்குச் சரியாக இருக்கவேண்டுமல்லவா? அப்படியில்லாமல் அது வேறுபட்டிருந்தது. அதே நிறையுள்ள வெள்ளியின் அளவுக்கும் வேருக இருந்தது. இதனுல் அந்தக்கிரீடம் சுத்தப்பொன்னுல் ஆன

தல்ல என்பதை நிரூபித்தான். பிறகு பொன்னையும், வெள்ளியையும் வெவ்வேறு நிறைகளாகச் சேர்த்து அந்தக் கிரீடத்தில் கலந்துள்ள வெள்ளியின் நிறையையும் கண்டுபிடித்தான். இவ்வளவு சரியாகத் தெரிந்து கொண்டதாக அப்பொற்கொல்லன் அறிந்தவுடன் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டான். ஆர்கிமிடீஸின் அறிவை எல்லோரும் கொண்டாடினர்கள்.

ஒரு தரம் ரோமாபுரிக்கும் ஸிஸிலிக்கும் யுத்தம்நேர்ந்தது. ஸைரகியூஸ் நகரம் ரோமர்களால் கைப்பற்றப்பட்டது. ரோமாபுரி படைவீரர்கள் நகரத்தைக் கொள்ளையிடும்போது ஆர்கிமிடீஸை யாரென்று தெரிந்து கொள்ளாமல் ஈட்டியால் குத்திக் கொன்றனர்.

இவரைப்பற்றி அநேக விஷயங்கள் நீங்கள் மேல் வகுப்பில் தெரிந்து கொள்ளுவீர்கள்.

12. தீப்பற்றினால் நாம் முதலில் செய்ய வேண்டிய சிகிச்சைகள்.

தீ அல்லது நெருப்பு என்பது இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் நமக்கு எவ்வளவு உபயோகமாக இருக்கிறது? நெருப்பு நமக்கு உஷ்ணத்தைக் கொடுக்கிறது. இப்பொழுதும் குளிர்காலத்தில் நமது பாட்டிமார்கள் குளிர்காய்வதற்காகக் கணப்புச் சட்டியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் சாப்பிடும் உணவுக்கு உருசி கொடுப்பது நெருப்பு. ஏனென்றால் நெருப்பு இல்லாவிட்டால் உணவுப் பொருள்களை வேகவைக்க முடியுமா? இரணச்சிகிச்சை செய்யும்போதும், அம்மை குத்தும்போதும் ஆயுதத்தை நெருப்பில் காய்ச்சுகிறார்கள். நெருப்பு அவ்வாயுதங்களில் நம் கண்களுக்குத் தெரியாமல் ஒட்டிக்கொண்டிருக்கும் அநேக விஷக்கிருமிகளைக் கொல்லுகின்றது. காடுகளில் தனிமையாயிருக்க நேரிட்டால் காட்டு மிருகங்களினின்றும் தப்புவதற்குத் தீ மூட்டி வைப்பார்கள். மிருகங்களுக்கும் தீயைக்கண்டால் பயமாகையால் அவை கிட்ட நெருங்கா.

ஆனால், இவ்வளவு பிரயோஜனமுள்ள நெருப்பு ஆபத்தை விளைவிப்பதற்கும் ஏதுவாயிருக்கிறது. நெருப்பினால் உயிர் துறக்கும் மக்களைப்பற்றித் தினந்தோறும் பத்திரிகைகளின் மூலமாய் கேள்விப்படுகிறோம். இப்படி இறக்க நேரிடுவது, மக்களின் அறியாமையாலேயே. நெருப்புப்பற்றி எரியும்போது என்னசெய்யவேண்டுமென்று தெரிந்திருந்தால் இத்தனை மரணங்கள் சம்பவிக்கமாட்டா.

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு நெருப்புப் பெட்டி என்றால் விருப்பம். அவைகளை வைத்துக்கொண்டு குச்சியைக் கீறி நெருப்பு உண்டுபண்ணுவதில் அவர்களுக்கு ஒரு ஆசை. இப்படிக் கீறும்போது நெருப்பு ஆடையில் படுவதினாலேயே அநேக தீவிபத்துகள் ஏற்படுகின்றன. ஆடையில் தீப்பிடித்தால் உடனே எழுந்து ஓடக்கூடாது. மற்றொருவரைத் தீப்பற்றும்போது நாமங்கிருந்தால் அங்கே கிடக்கும் கோணியையோ, கம்பளியையோ அல்லது கெட்டியாக இருக்கும் துணியையோ எடுத்து உடனே நெருப்பின் மீது காற்றுப்படாமல் மூடவேண்டும். ஓட விடக்கூடாது. தனிமையாக இருக்க நேரிட்டாலோ அதைரியப்படாமல் படுத்துக்கொண்டு உருளவேண்டும். அப்படி உருண்டால் நெருப்பு அணைந்து விடும். எக்காரணத்தை முன்னிட்டும் தண்ணீரை மேலே கொட்டிக்கொள்ளக் கூடாது. தண்ணீரினால் நெருப்புக் காயங்கள் அதிகமாகும். சீழ் பிடிக்கும். ஆகையால் துணியினால் மூடுவதே சிறந்தது.

சில சமயங்களில் நாம் இரவில் படுக்கையினருகே விளக்கை வைத்துக்கொண்டு படிப்பதுண்டு. அப்படியே தூங்கிவிட்டால் விளக்கின்மேல் கையோ காலோ பட்டு, விளக்கு கீழே விழுந்து தீப்பற்றுவதும் உண்டு. அப்போதும் அத்தீயை அணைப்பதற்குத் தண்ணீரைக் கொட்டக்கூடாது. மணலோ, சாம்பலோ அல்லது கோணியோ அத் தீயின்மேல் போட்டு மூடித் தீயைப் பரவவொட்டாமல் செய்யவேண்டும்.

ஜன நெருக்கமான சில இடங்களில் தீப்பிடித்தால் மனோதைரியத்தை விடக்கூடாது. நாடகக்கொட்டகை

களிலோ, பள்ளிக்கூடங்களிலோ, தீப்பற்றி எரிவதற்கு இட மிருக்கிறது. அப்போது அமைதியாயிருக்கவேண்டுவதே நமது முதற்கடமை. இச்சந்தர்ப்பங்களில் இக்கட்டடங்க ளில் இருப்போர்க்கு இரண்டுவித ஆபத்துகள் நேரிடும். நெருப்பினுல் ஆபத்து நேருவது ஒரு பக்கமிருக்க, தப்பித் துக்கொண்டு ஓடுவோரால் மிதிக்கப்படுவதே அதைவிடப் பெரிய ஆபத்து. பல வருஷங்களுக்கு முன் பார்க் வேடிக் கையில் இப்படித்தான் தீப்பற்றி அநேகர் மாண்டதாகச் சொல்லுவார்கள். ஆகையால், இம்மாதிரியான கஷ்டத் துக்குள்ளாகாமல் நிதானமாக இருந்து தப்பவேண்டிய வழியைக்கண்டு பிடிக்கவேண்டும். அது வரையில் நேராக நிமிர்ந்து கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கவேண்டும். அப் படி இருந்தால் பிறர் நம்மை நசுக்காமல் காப்பாற்றிக் கொள்ளலாம்.

தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும்போது நம்முடைய அறை தீப்பற்றிப் புகை சூழ்ந்து இருந்தால், எழுந்து நிற்காமல் கையாலும் காலாலும் நகர்ந்து வெளியில் செல்ல முயலவேண்டும். இதுவே புகையினுல் திகைக்காதபடி யிருக்க அனுசரிக்க வேண்டிய முறை.



13. சில தொழிலாளிகள்.

ஒவ்வொரு கிராமத்திலும் இன்றியமையாத சில தொழிலாளிகள் உண்டு. இவர்களுக்கு வரி இல்லாமல் சில நிலங்கள் மான்யமாய்த் தொன்றுதொட்டு விடப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்களுக்குவேண்டிய வேலைகளை இவர்கள் செய்து கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட தொழிலாளிகளில் இருவர், மரவேலை செய்பவரும், இரும்பு வேலை செய்பவருமாவர்.

மரவேலை செய்பவருக்குத் தச்சர் என்று பெயர். இவர்கள் வீடுகட்ட வாசற்கால், ஜன்னல், தூண், சரம், கைத்துண்டு முதலியவைகளைச் செய்வார்கள். மேஜை, நாற்காலி, விசிப்பலகை முதலியன செய்பவர்களும் இவர்களே. மரக்கலம் என்ற கப்பல் செய்வதற்கும் இவர்களுதவிவேண்டும். இவர்களுடையவேலை அநேகவிதமாக இருப்பதால்வேலைக்கு


ஏற்ற ஆயுதங்களை உபயோகிக்கிறார்கள். மரப்பலகையை அறுக்கவேண்டுமானால் 'வாள்' என்ற ஆயுதத்தை உபயோகிப்பார்கள். சிறிய பலகையை துண்டிக்கவேண்டுமானால் வெட்டவேண்டிய இடத்தில் உளியை வைத்துத் துண்டிப்பார்கள். பலகையை மழமழப்பாக்க இழைப்புளியால் இழைப்பார்கள். மரங்களில் கணுக்கள் இருந்தால் அவைகளை வாய்ச்சி கொண்டு எடுப்பார்கள். துளைபோட துறப்பணத்தை உபயோகிப்பார்கள். பயிர்த்தொழிலுக்கு முக்கியமாகவேண்டிய கலப்பை முதலியனவும், இவர்கள்தான் செய்து கொடுக்கவேண்டும்.

கலப்பையைத் தச்சர் செய்தாலும் இதற்கு முக்கிய பாகமான "கொழுவை" இரும்பு வேலைக்காரர் செய்யவேண்டும். இரும்புவேலை செய்பவர்களுக்குக் கருமார் என்று பெயர். இவர்கள் இரும்பைக் காய்ச்சி அடிக்கிறபடியால் எப்பொழுதும் நெருப்பினருகிலேயே வேலை செய்கிறார்கள். இவர்கள் வேலை செய்யும் இடத்திற்கு உலைக்களம் அல்லது உலைக்கூடம் என்று பெயர். அவர்கள் கனத்த சம்மட்டி கொண்டு அடிப்பதால் சரீர திடமும், புஜபலமுமுள்ளவர்களாய் இருப்பார்கள். உலைக்குக் காற்று நன்றாக வீசத் துருத்தியை உபயோகிப்பார்கள். எருது, குதிரை முதலியவை நோண்டாமல் நடக்கக் கட்டும் லாடம் செய்பவர்களும் அவர்களே. வண்டிக்கு அச்சும், சக்கரங்களுக்குக் கட்டுகளும் அவர்கள்தான் செய்வார்கள். ஒரு சிறு ஆணி இல்லாமையால் ஒரு பெரிய இராஜ்யமே போயிற்றென்ற கருத்துள்ள பழமொழி ஒன்று ஆங்கிலத்தில் உண்டு. அவர்களே ஆணியும் செய்பவர்களாகையால் ஜனசமூகத்

திற்கு அவர்கள் அவசியமானவர் என்று நன்கு புலப் படுகின்றது.

மேற்கூறியவர்களைப்போல் அவ்வளவு முக்கியமான வர்களில்லாதபோதிலும் இவ்விருவர் இனத்தையே சேர்ந் தோர் நகைகள் செய்யும் தட்டார்கள். இவர்கள் பொன், வெள்ளி வேலையிலும், நவரத்தினங்களை இழைக்கும் வேலை களிலும் கைதேர்ந்தவர்கள். இந்துக்களுக்குள் கலியாணச் சின்னமாகிய மாங்கல்யம் இவர்களால்தான் செய்யப்பட வேண்டும். மேலும், நகைகள் செய்வதும் பணத்தைச் சேர்த்துவைக்கும் ஒரு முறையேயல்லவா? ஆகையால் இவர்களும் கிராமங்களில் இருக்கவேண்டியது அவசியமாகி றது. இவர்கள் பொன்னை உருக்க கும்மட்டியை உபயோகப் படுத்துகிறார்கள். இவர்களுடைய ஆயுதங்கள் மெல்லியவை. சுத்தியால் உலோகத்தைத் தட்டுவார்கள். சுத்திகளில் அநேக விதம் உண்டு.

இம்மூன்றுவித தொழிலாளிகளும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். தேவதச்சனாகிய விசுவகர்மாவின் மரபினர் என்று இவர்கள் தங்களைக் கூறிக்கொள்ளுகிறார்கள். ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களில் ஒருவன் தச்சுவேலை செய்ய வும், மற்றொருவன் கருமாரவேலை செய்யவும், மூன்றாமவன் தட்டாரவேலை செய்யவும் கற்றுக்கொள்வதுண்டு. இவர்கள் தங்கள் பிள்ளைகளை வேறொருவரிடத்தில்தான் வேலைகற்றுக் கொள்ள விடுவது என்ற வழக்கத்தைக் கையாண்டு வரு கின்றனர்.



முன் சொன்னவர்களைப் போலவே குயவனும் ஜனங்களுக்கு முக்கிய உபயோகமான தொழிலாளியே. சமையலுக்கு வேண்டிய பாத்திரங்கள் முற்றிலும் அவனே வனைந்து கொடுப்பான். முற்காலத்தில் ஏழைகள், தனவந்தர்கள் முதலிய பலரும் மண் பாத்திரங்களையே உபயோகித்து வந்தார்கள். தற்காலத்திலோ தனவந்தர்கள் மண் பாத்திரங்களுக்குப் பதிலாக வெண்கலம், பித்தளை, தாமிரம் முதலியவற்றால் செய்துள்ள பாத்திரங்களைக் கையாடி வருகிறார்கள். இன்னும் பெருந் தனவந்தர்கள் வெள்ளிப் பாத்திரங்களையும் உபயோகிக்கிறார்கள். எனினும் ஏழைகள் உபயோகிப்பது மண்பாத்திரமே. மண் பாத்திரத்தில் சமைப்பதே தேக சௌக்கியத்துக்குத் தக்கதென்று அறிஞர் பலர் எண்ணுகிறார்கள். இப்பொழுதும் மிக்க ஏழைகள் மண்கிண்ணியில் சாப்பிடுவதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

குயவர்கள் மண்ணைக்கொண்டு பாண்டங்கள் செய்யும் வகையைப்பற்றி முன்னமே படித்திருக்கிறீர்கள் அல்லவா? அவர்கள் பலவகை விசித்திரப்பொருள்கள் செய்வதில் வல்லவர்கள். இந்துக்களது விவாகங்களில் இன்றியமையாது உபயோகப்பட்டு வருகிற கூறைச்சால், முதலியவைகளும், விளக்கு ஏற்றும் மடக்கு, அகல் முதலியவைகளும் அவர்களாலேயே செய்யப்படுகின்றன. இவர்கள் நமது நாட்டில் வீட்டுக் கூரைக்கு உபயோகிக்கும் ஓடு அறுக்கவும் வல்லவர்கள்.

14. பொதுச்சாலையில் கால்நடையாகச் செல்லும் போது அநுசரிக்கவேண்டிய விதிகள்.

சிறிய ஊராயினும் பெரிய ஊராயினும் பொதுச் சாலைகளில் நடப்பது மிகவும் கஷ்டமாயிருக்கின்றது. பட்டணங்களில் பஸ்ஸுகளும், மோட்டார்களும், வண்டிகளும், ரிக்ஷாக்களும், பாதைகளில் எப்பொழுதுமே போய்க்கொண்டிருக்கின்றன. இவைகளின் சக்கரங்களில் அகப்பட்டு ஆபத்துக்குள்ளாகாமல் பாதைகளில் நடப்பதற்குச் சிறு பிராய முதல் சில விதிகளை நாம் அநுசரிக்கவேண்டும். பெரிய பட்டணங்களில் மேற்கூறிய வண்டிகளுடன் டிராம் வண்டிகளும் மின்சார சக்தியினால் வேகமாகத் தெருக்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன. லண்டன், பாரிஸ் முதலிய மிகப் பெரிய நகரங்களில் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்குச் செல்லவேண்டியவர்கள் பூமியின்கீழ் அமைக்கப்பட்ட "டியூப்" ரயிலில் செல்லுவார்கள். அந்நகரங்களில் ஒரு பாதையின் குறுக்கே செல்லச் சில சமயங்களில் அரை மணி நேரம் பிடிக்குமாம். ஆனால், அந்தத்தேசத்து ஜனங்கள், தெருச் சந்திப்புகளில் நிற்கும் போலீஸ்காரர்களின் எச்சரிக்கைகளைக் கவனித்து நடப்பதால் உயிருக்கு ஆபத்து அவ்வளவு நேரிடுவதில்லை. இந்தப் போலீஸ்காரர்களின் எச்சரிக்கையை வண்டி ஓட்டுகிறவனோ, மோட்டார் செலுத்துபவனோ கவனிக்காமல் போனால் அநேகருக்குப் பிராணாபத்து நேரிடக்கூடும். அவ்வாறே பாதையில் நடந்து செல்பவன் அனுசரிக்கவேண்டிய விதிகளைக் கவனித்து

அதன்படி நடவாமற்போனல் அவனுக்கும் மற்றவர்களுக்கும் தீங்குவரும். ஆகையால் பாதையில் போகும்போது கவனத்தோடும் விதிகளுக்கு அடங்கியும் போகவேண்டும். சமயத்தில் தைரியமும், மனேதிடமும் வேண்டும். வண்டிகளுக்கோ, நடப்பவர்களுக்கோ விபத்து ஏற்படாமலிருக்க அரசாங்கத்தார் சில விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்விதிகளை நாம் நன்குணர்ந்து அவைகளின்படி எல்லோரும் நடப்போமானல் சாலைகளில் சம்பவிக்கும் மரணங்களும், ஆபத்துகளும் நேரிடா. அவ்விதிகளில் சில பின் வருமாறு.

1. முதன் முதலாக ஆபத்துவந்தபின் தப்பித்துக் கொள்வதைவிட வராமலே இருக்கும்படி தடுப்பதுதான் மிக எளிது என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

2. ஒரு பாதையில் செல்ல வீட்டிலிருந்து புறப்படும் போது வலதுபக்கம், இடதுபக்கம் ஆகிய இருபக்கங்களிலேயும் வண்டிகள் வருகின்றனவா என்பதைப் பார்த்துக் கொண்டு பாதையில் அடிவைக்கவேண்டும்.

3. பாதையில் நடக்கும்பொழுது வலது புறம் ஓரத்தில் நடந்து செல்லவேண்டும். அப்படிச் சென்றல் நாம் நமக்கு எதிரில் வரும் வண்டிகளைக் கவனிக்கமுடியும். தெரு ஓரங்களில் கால்நடைப்பாதை இருந்தால் எப்பொழுதும் அந்தப்பாதையையே உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுது வண்டிகள் வரும் என்ற பயம் கிடையாது.

4. பாதையின் குறுக்கே நடக்கவேண்டியிருந்தால் சற்று நிதானித்துக் குறுக்கே செல்லவேண்டும்.

5. நாம் வலதுபக்கத்திலேயே எப்பொழுதும் நடக்க வேண்டியிருப்பதால் பாதையின் குறுக்கே செல்லும்போது வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்துக்கல்லவோ போகிறோம்? அப்பொழுது சாலையின் மத்தியபாகம் வரும் வரையில் நம்முடைய வலது பக்கத்திலிருந்து ஏதாவது வண்டிகள் வருகின்றனவா என்று பார்த்துக்கொண்டு நடக்க வேண்டும். சாலையின் மத்திய பாகத்தைக் கடந்தபின் நமது இடது பக்கத்திலிருந்து வண்டிகள் வருகின்றனவா என்று கவனித்துக் கடக்கவேண்டும்.

6. ஒரு வண்டியின் பின்னேயே நடந்து போவதாயிருந்தால், வண்டிக்குச் சற்று தூரத்தில் எதிர்ப்பாதை தெரியும்படி நடக்கவேண்டும்.

7. ஓடும் வண்டியிலிருந்து எப்பொழுதும் இறங்கக்கூடாது. வண்டியிலிருந்து இறங்குவதாயிருந்தால் பாதையில் மற்றவண்டிகளைப் பார்த்து இறங்கவேண்டும்.

8. வண்டியிலிருந்து இறங்கும்போது எப்பொழுதும் இடதுபக்கத்திலேயே இறங்கவேண்டும்.

9. ஒரு வண்டியினின்றும் தப்புவதற்காக ஒரு பக்கமாக நடந்தால் அதே பக்கமாகவே நடந்துசெல்லவேண்டும். மறுபடியும் திரும்பிவரக்கூடாது. ஒரே பக்கமாய்ப்போனால் தான் வண்டிக்காரர்களுக்கு எந்தப் பக்கம்போனால் ஆபத்து ஏற்படாது என்று நிச்சயிக்க முடியும்.

10. குறட்டிலிருந்து சாலையில் இறங்கும்போது எப்பொழுதும் வலது பக்கத்தைப்பார்த்து இறங்கவேண்டும்.

11. வலது பக்கத்திலிருந்து ஒரு வண்டியும் வரவில்லையாவென்று பார்த்த பிறகே டிராம்கார் முன் குறுக்கே செல்லலாம். டிராம்காரின் பின்னல் பாதையின் குறுக்கே செல்லும்போது இரண்டு பக்கங்களிலேயும் வண்டிகள் இல்லாமல் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்கவேண்டும்.

12. தெருச்சந்திகளில் எப்பொழுதும் ஜனநெருக்கம் அதிகமானதால் பாதையின் குறுக்கே போகக்கூடாது.

13. நம்முடைய சிநேகிதர்களின் தோளின்மேல் கை போட்டுக்கொண்டோ அல்லது அவர்களுடைய கையைப் பிடித்துக்கொண்டோ பாதையின் குறுக்கே செல்லக் கூடாது.

14. தெரு ஓரங்களில் இருக்கும் கால்நடைப்பாதைகளில் நடக்கும்போது, அப்பாதையில் நம்மைப்போல் அநேகர் நம்முடனேயே நடக்கவேண்டுமென்பதை மறக்கக் கூடாது.

15. பாதையில் நிற்கும் வண்டிகளின் பின்னல் நிற்கக் கூடாது. எந்த நிமிஷத்திலும் அந்த வண்டிகள் பின்னே போகலாம். அதனல் ஆபத்து ஏற்படும் என்பதை அறிய வேண்டும்.

16. தெருவில் நடந்து போகும்போது சிநேகிதர் யாராவது வண்டியில்போனல் அவர்களுடைய கவனத்தை கவரக்கூடாது. பாதையில் நிற்கும் போலீஸ்காரனின் பின்புறமாகப் பாதையின் குறுக்கே செல்லக்கூடாது. அவன் நம்மைப் பார்க்க முடியாமலிருப்பதால் நமக்குவேண்டிய உதவியைச் செய்ய அவனல் முடியாது.

17. எப்பொழுதும் இப்படி சந்திப்புக்களில் நிற்கும் போலீஸ்காரர்களுடைய எச்சரிக்கைகளை அலக்ஷியம் செய்யக்கூடாது. அவர்கள் சொல்வதை உடனே கேட்க வேண்டும்.

18. பாதையில் போய்க்கொண்டிருக்கும் போது காலில்லாதவர்களோ, கண்ணில்லாதவர்களோ பாதையைக் கடக்க வேண்டியிருந்தால் அவர்களுக்கு உதவி புரியவேண்டியது நமது முதற்கடமை என்பதை என்றும் மறக்கக் கூடாது.

மேற்சொன்ன விதிகளை நாம் சாலையில் நடக்கும்போது அனுஷ்டிப்போமானால் நமக்கு ஆபத்து வராமல் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதுடன் பிறருக்கும் ஆபத்து வராமல் தடுப்போம்.

15. சென்னைப் பொதுஜன நந்தவனம்.

சென்னையில் பார்க்கவேண்டிய இடங்களில் ஒன்று இந்த நந்தவனம். இது சென்ட்ரல் ஸ்டேஷனுக்கருகில் உள்ளது. இந்தத்தோட்டம் சுமார் ஒரு மைல் நீளமும் கால் மைல் அகலமுமானது. இந்த நந்தவனத்தை இராணித் தோட்டமென்றும், விக்டோரியா தோட்டமென்றும், சிங்காரத் தோட்டமென்றும் சாதாரண ஜனங்கள் சொல்லுவார்கள். இதற்கு ஆங்கிலத்தில் "பீபில்ஸ்பார்க்" என்று பெயர்.

இந்தத் தோட்டத்தில் அநேக கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நகரபரிபாலனசபைக் கட்டடமாகிய ரிப்பன் கட்டடமும், பிரபல பொதுக் கூட்டங்களுக்கும், நாடகங்களுக்கும் உபயோகப்படக்கூடிய "விக்டோரியா பப்ளிக் ஹால்" என்று சொல்லப்படும் கட்டடமும், பல வித கடைகளுள்ள "மூர் மார்க்கெட்" என்ற கட்டடமும் இதில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கட்டடங்களின் பின்புறமே நந்தவனம் ஆரம்பிக்கின்றது. சில இடங்களில் தாமரைத் தடாகங்களும், சில இடங்களில் குன்றுகளும் அமைக்கப்பட்டு இடையிடையே உள்ள இடங்களில் பல தேசத்தினின்றும் கொண்டுவரப்பட்ட மரங்களும், செடிகளும், கொடிகளும் வளர்க்கப்பட்டிருக்கின்றன. மரங்களில்லா இடங்களில் புற்றரை பச்சென்று கண்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். மரங்களின் நிழலில் உட்கார ஆங்காங்கே காரையினால் செய்யப்பட்ட திண்ணைகளும், மரப்பலகைகளும் அமைக்கப்பட்டிருக்கும்.


முக்கோண வடிவமாகவும், தாமரைப்பூப்போலவும், சதுர வடிவமாகவும், வட்ட வடிவமாகவும் பாத்திகள் கட்டி இவைகளில் பலவர்ண புஷ்பச்செடிகள் பயிராக்கப்பட்டிருக்கும். சற்று தூரத்தினின்றும் பார்க்கும்போது இவையெல்லாம் ஒருங்கு சேர்ந்து பெரிய இரத்தினக் கம்பளம் விரித்தாற்போல் தோன்றும். இந்த நந்தவனத்தில் உலாவுவதற்குச் சிறு பாதைகளும், பெரிய பாதைகளும் போடப்பட்டிருக்கின்றன. இங்கே பெரிய மைதானமாய் இருக்கிறபடியால் எப்பொழுதும் காற்று வீசிய வண்ணமாகவே இருக்கும்.

இந்த நந்தவனத்தில் மிருகக்காட்சிச்சாலையும் இருக்கிறது.: அம்மிருகங்களைத் தனிமையான இடத்தில் வைத்து அந்த இடத்தைச் சுற்றித் துத்தநாகத் தகட்டினால் வேலி அமைத்திருக்கிறார்கள். நாம் வெளியிலிருந்து இம்மிருகங்களைப் பார்க்கமுடியாது. உள்ளேசென்று பார்க்க ஒரு அணா கட்டணம் செலுத்தவேண்டும். உள்ளே புலிகளும், சிறுத்தைகளும், சிங்கங்களும், பலவிதக் குரங்குகளும், முதலையும், பலவித பட்சிகளும், கிளிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஓர் நீர்யானையும், ஒட்டைச்சிவிங்கிகளும், ஓர் யானையும் இருக்கின்றன. விடுமுறை நாட்களில் இவைகளைப் பார்க்கச் சிறுவர்களும் பெரியோர்களுமாக ஏராளமான ஜனங்கள் வருவார்கள்.

இந்த நந்தவனத்தில்தான் பிரதி வருஷமும் கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் வேடிக்கைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் பலவித போட்டிப் பந்தயங்கள் நடைபெறும். சில தினங்கள் இரவில் பாணவேடிக்கைகளும்

உண்டு. இந்த வேடிக்கைக்காலத்தில் ஒரு பொருட்காட்சிச் சாலையும் ஏற்பாடு செய்வது வழக்கம். அதைப் பார்த்தால் எங்கெந்த ஊரில் என்னென்ன கைத்தொழில் செய்கிறார்கள் என்பதை நாம் அறியலாம்.

சென்னையில் வசிப்போருக்கு இந்த நந்தவனம் வெகு உபயோகமாயிருக்கின்றது. நல்ல காற்று உட்கொள்வதும் பலவித ரமணீயமான புஷ்பங்களையும், மரங்களையும், செடிகளையும் பார்ப்பதும் அதிக சந்தோஷத்தை விளைவிக்கின்றன.



16. தாஜ் மஹால்.

வட இந்தியாவில் ஆக்ரா என்ற ஓர் நகரம் உளது. அந்நகரம் கங்கையின் கிளைநதியாகிய யமுனையாற்றங்கரையில் இருக்கிறது. மொகலாய சக்கரவர்த்திகள் ஆண்ட

போது அந்நகரம் பிரபலமாயிருந்தது. ஆக்ரா என்ற பெயரைக்கேட்கும்போது அதில் இருக்கும் அபூர்வமான "தாஜ் மஹால்" என்ற கட்டடமே இப்பொழுது யாவருக்கும் ஞாபகத்துக்கு வரும். இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வரும் எல்லா ஐரோப்பியரும், அமெரிக்கரும், அயல் நாட்டாரும் இப்பட்டணத்துக்குப்போய் இக்கட்டடத்தைப் பார்க்கத் தவறமாட்டார்கள் என்ருல், இது அதிக சிலாக்கியமானதென்று விளங்குகிறதல்லவா?

இந்த அற்புதமான கட்டடம் ஒரு மொகலாயஅரசன் மனைவியின் தேகத்தை அடக்கம் செய்யக் கட்டப்பட்டது. அந்த அரசன் பெயர் ஷாஜிஹான். இவன் புகழ்பெற்ற அக்பரின் பேரன். ஜிஹாங்கிர் அரசன் புதல்வன். இவனுடைய தாயாராகிய நூர்ஜிஹான் உலகத்திலேயே நிகரற்ற அழகு வாய்ந்தவள். ஷாஜிஹான் தன் தாயைக்காட்டிலும் அழகுள்ள பெண்ணை மணந்தார். அவள் பெயர் மும்தாஜ் மஹால். பெயருக்குத் தகுந்தாற் போல் அவள் அவ்வரசன் அரண்மனைக்குத் திலகமாக விளங்கினுள்.

அழகில் மாத்திரம் சிறந்தவளாயிராமல் அவ்வரசி அறிவிலும் சிறந்தவளாக இருந்தாள். தன்னுடைய கணவனை எப்பொழுதும் நற்காரியங்களிலேயே ஈடுபடும்படி வற்புறுத்தி வந்தாள். அரண்மனை உத்தியோகஸ்தர்களை ஆடை ஆபரணங்களில் வீண் செலவிடாமல் மிகுந்த பணத்தை ஏழைகளுக்குதவும்படி செய்தாள். தன் கணவனிடம் மிகுந்த அன்புகொண்டவள். போர்க்களத்திலும்

அவனை விட்டுப்பிரியாமல் உடன் சென்று அவனோடு கஷ்டங்களை அனுபவித்து வந்தாள். இவ்வளவு நற்குண நற்செய்கைகளோடு கூடிய மனைவியோடிருக்க அரசன் கொடுத்துவைக்கவில்லை. 1630-ம் வருஷம் அரசனுடன் போர்க்களத்துக்குச் சென்றிருந்தபோது உயிர் துறந்தாள். இத்தகைய மனைவியை இழந்ததால் அரசனுடைய துயரத்திற்கு அளவேயில்லை.

அவளுடைய சிறந்த குணங்களுக்கேற்ப ஓர் அழகிய சமாதி கட்டவேண்டுமென்று தீர்மானித்தான். உலகத்திலேயே சிறந்த கட்டடமாக விளங்கவேண்டுமென்று நினைத்து, பல தேசங்களினின்றும் சிறந்த சிற்பிகளை வரவழைத்தான். அவர்களுள் தாஜ்மஹால் கட்ட உஸ்தாத் இஸர் என்ற சிற்பியைத் தேர்ந்தெடுத்தான்.

அரசன் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுப்பானா என்பதை அறிய இஸர் என்னயோசனை செய்தானென்பதற்கு ஒரு கதை உண்டு. முதலில், அரசன் ஒரு வண்டி நிறையப் பொன் கொடுக்க வேண்டுமென்று கேட்டான். அப்படியே அரசன் அதைக் கொடுக்க அவ்வண்டி பொன்னையும் யமுனைநதியில் கொட்டினான். இதையறிந்த அரசன் அவனைக் கூப்பிட்டுக் கேட்க "ஒரு வண்டிபொன் போனதற்கே இவ்வளவு கஷ்டப்படுகிறவர்கள் உலகத்திலேயே சிறந்த கட்டிடம் கட்டத் தகுதியுடையவர்களல்லர்" என்று மறுமொழி உரைத்தான். அதைக்கேட்டதும் அரசனுக்கு இவனுடைய நோக்கம் தெரிந்தது. உடனே அவன் கேட்டதைக் கொடுக்கும்படி ஆக்ஞாபித்தான்.

கட்டடம் கட்டிமுடியப் பதினேழு வருஷகாலம் சென்றது. ஒவ்வொரு நாளும் அறுபதினுயிரம் ஜனங்கள் வேலை செய்தார்கள். ஆறு கோடி ரூபாய் பிடித்தனவாம்.

இந்த மஹால் வெள்ளைப்பளிங்குக் கற்களினலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. பளிங்குக் கற்களில் தந்தவேலையைப்போல் வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பாரசிகம், திபேத்து, சீனு, பிரான்ஸ் முதலிய தேசங்களினின்றும் அருமையான கற்களும், நவரத்தினங்களும், தருவிக்கப்பட்டதுடன் பொன்வேலைக்காரர்களும் வரவழைக்கப்பட்டார்கள்.

இவ்வளவு அழகான கட்டடத்தைப் பார்க்காத கண்கள் வீணே என்ருல் அது அதிக அற்புதமானதென்பது விளங்கவில்லையா ? நீங்கள் பெரியவர்களாகும்போது இதைப் பார்க்கத் தவருதீர்கள். இதைப்பற்றி எவ்வளவு படித்தாலும் நேரில் பார்ப்பதுபோல் ஆகாது.


17. குரு பக்தியும், மாணவர் கடமையும்.

குரு என்னும் மொழி ஞானசிரியன், உபாத்தியாயன் முதலிய பல பெயர்களால் வழங்கப்படும். இங்கே அவ்வார்த்தை உபாத்தியாயன் என்ற அருத்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆகவே குருபக்தி என்றால், உபாத்தியாயரிடத்தில் மாணக்கர்கள் செலுத்தவேண்டிய பக்தி அல்லது அன்பு என்று பொருள். பிறப்பித்தோன், கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்கு உதவினோன் ஆக இவ்வைந்துபேர்களும் தந்தையர்கள் ஆவார்கள் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதினால், பிள்ளைகளே! பெற்ற தந்தைக்குப்பின் உங்களுக்கு முக்கியமானவர் உபாத்தியாயரே ஆவர். குருவில்லாத வித்தை குணமில்லையாதலால், குருவைக்கொண்டே நீங்கள் கல்வி கற்று வருகிறீர்கள். உங்கள் அறிவைத்துலக்கி,உங்களுக்கு நல்ல விஷயங்களைப்போதிக்கும் உபாத்தியாயர்மீது நீங்கள் அன்பும், மதிப்பும் பாராட்டி அவர் ஆணைவழி நின்று அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அது உங்களது முக்கிய கடமையாகும். மேலும், அவர் கற்பிக்கும் பாடங்களைக் கவனமாயும், பக்தியாயும் கேட்கவேண்டும். நீங்கள் தவறிப்போகும்போது உங்களைத் தண்டித்தால் முறுமுறுத்து அவரை வெறுக்கக்கூடாது. அவரோடு எதிர்த்துப் பேசவும் கூடாது. ஏனென்றால்,உங்களுடைய நன்மைக்காகத்தான் அவர் தண்டிக்கிறார். உபாத்தியாயர் அடித்தால் சில பிள்ளைகள் பெற்றோரிடம்சென்று, தங்கள் குற்றங்களை மறைத்துவிட்டு, உபாத்தியாயர் அநியாயமாக அடித்

தாரென்று அழுது அலறி முறையிட்டுக் கொள்வார்கள். இப்படிச் செய்பவர்கள் கெட்ட பிள்ளைகள். இவர்கள் விருத்தியடைவது கஷ்டம். உனக்கு ஏதாகிலும் தெரியாவிட்டால் உபாத்தியாயரிடம் கேட்டுத் தெரிந்துகொள். பக்கத்திலுள்ள பிள்ளைகளைப் பார்த்து ஒன்றும் எழுதாதே. அப்படிச் செய்வது திருட்டுத்தனம். இந்தப் பழக்கம் உன்னிடம் ஏற்பட்டுவிட்டால், உன்னுடைய சுய ஊக்கங்கெட்டுப் போக, நீ சிறிதும் கல்வியில் தேறாமல் முற்றிலுங் கெட்டுப் போவாய்.

பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகளோடு நீ எப்பொழுதும் சமாதானமாயிரு; அவர்களை உன் சகோதரர்களைப் போல் நேசி. உன்னைவிட எளிய பையன்களை அடித்துப் பரிகாசம் செய்யாதே. சில கெட்ட பிள்ளைகள் மற்றப் பிள்ளைகளுடைய புஸ்தகங்களைக் கிழிப்பதும், எழுதுகோல்களை ஒடித்துப் போடுவதும் உண்டு. அப்படிச் செய்யக் கூடாது. தரையிலும், மேஜைமீதும் இங்கி கொட்டுவதும், காகிதங்களைக் கிழித்து எறிவதும், கெட்ட வழக்கங்கள். இப்படி நீ ஒருபோதும் செய்யத்துணியாதே. நீ படிக்கும்போது வேறு எந்த விஷயத்திலும் சிந்தையைச் செலுத்தாமல், உன் முழு கவனத்தையும் பாடத்தின் மேலே வைத்துப்படி. கொஞ்சம் படித்தாலும் நன்றாகப் படி. விளையாடும்போது படிப்பைப்பற்றி நினையாதே. சாப்பிடும்போது சந்தோஷத்துடன் திருப்தியாய்ச் சாப்பிடு. ஜெபம் செய்யும்போது பக்தியாய் ஜெபி. தூங்கும் போது கவலையின்றித் தூங்கு. நீ செய்யவேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் நன்றாகச் செய். அப்போது உனக்கு எல்லாம் கைகூடிவரும், நன்றாய் முடியும்.

"செய்வன திருந்தச் செய்"



18. நெருப்புக் கோழி

பட்சிகள் எல்லாவற்றிலும் பெரியது நெருப்புக் கோழி. இது ஆறடிமுதல் எட்டடிவரையில் உயரமுள்ளது. கால்கள் நீளமாயும் உறுதியாயும் இருக்கும். இதன் இறகுகள் சிறியவை.

நெருப்புக்கோழி தென் ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா, அரேபியா முதலிய இடங்களிலுள்ள பாலைவனங்களில் விசேஷமாய் வசிக்கும்.

நெருப்புக்கோழி பழம், கந்தை, தோல், ஆணி முதலியவைகளைத் தின்னும். அரேபியாவிலுள்ளவர்கள் பாலைவனத்தைக் கடக்க இதன்மேல் ஏறிச் சவாரி செய்வார்கள்; ஆகையால் இதை வனாந்தரப்பட்சி என்றும் அழைப்பார்கள். இது வனாந்தரங்களில் மணலில் பள்ளந்தோண்டி

அதில் முட்டையிடும். ஒவ்வொரு முட்டையும் ஒரு பெரிய தேங்காயளவாயிருக்கும்.

நெருப்புக்கோழிகள் ஓரிடத்தில் இரண்டு மூன்று ஒன்றுசேர்ந்து முட்டையிடும். முட்டைகள் பொரிவதற்குச் சூரிய வெப்பம் போதுமானதாயினும், அம்முட்டைகளுக்கு இராக்காலங்களில் தீங்குண்டாகாமல், ஆண்பறவையும், பெண்பறவையும் முறையாக மாறிமாறி அடைகாத்துப் பாதுகாக்கும். அதற்கு மோப்பமறியும் தன்மையுண்டாதலால் யாராவது முட்டைகளைத் தொட்டால், அதை மோப்பத்தால் தெரிந்து பிறமுட்டைகளையும் உடைத்து நாசஞ்செய்யும்.

இதை வேட்டையாடுபவர்கள் பிடிக்கப்போனால் வளைந்துவளைந்து ஓடும். ஓடும்போது வழியில் மரத்திலுள்ள பொந்துகளில் தலையை நுழைத்துக்கொள்ளும். அதனால் தன் விரோதிக்கு அகப்படாமல் மறைந்து கொண்டதாக நினைத்துக்கொள்ளும். உடனே வேட்டையாடுபவர்கள் சுலபமாய்ப் பிடித்துக் கொள்வார்கள்.

இதன் இறகுகள் நீண்டும், பளபளப்பாயும், மிருதுவாயும், தூய வெண்மையாயும் இருக்கும். மேனாட்டு மாதர்கள் அந்த இறகுகளை அதிக விலை கொடுத்து வாங்கித் தலையில் ஆபரணமாகத் தரித்துக்கொள்வார்கள்.

நெருப்புக்கோழியை வேட்டையாடிப் பிடிப்பது அதிக கஷ்டமானது. அரேபியர்கள் அதிக வேகமாக ஓடும் குதிரைகளின் மேலேறி அதனைத் தொடருவார்கள். அப்பறவை எப்போதும் விரைந்தே ஓடுமாதலால், வேட்டைக்காரர்கள் குதிரைகளையும் மனிதரையும் வைத்து குறுக்கு

வழியிற் சென்று நாலைந்து தினங்கள் அதைத் தொடர்ந்து செல்லுவார்கள். வேடர்களுக்குப் பயந்தோடும் அப்பறவை, தீனியின்றிச் சோர்வடையும். தான் இனித் தப்பியோட முடியாதென்று தோன்றும்பொழுது, அது தன்னுடைய தலையை மணலிலாவது, மரப்பொந்திலாவது மறைத்துக் கொள்ளும். அவ்வாறு தான் மனிதர்களைப் பாராவிடில் அவர்களும் தன்னைக் காணவில்லை என்று நினைத்துக்கொள்ளுமாம்.

அதன் முட்டைகளும், மாமிசமும் உணவாகவும் உபயோகப்படுகின்றன. தோல் பலவகையில் உபயோகப் படும். அதன் முட்டையின் ஓட்டை ஜல பாத்திரமாகவும் உபயோகிக்கிறார்கள்.

வருஷத்திற்கு இருமுறை அவற்றின் இறகுகள் தாமாகவே உதிர்ந்து புதிய இறகுகள் முளைக்கும்.

19. தேசத்தைக் காத்த சிறுவன்.

ஐரோப்பாவில் ஹாலண்ட் என்னும் ஓர் தேசமுண்டு. அது கடற்கரையிலுள்ள நாடுகளில் ஒன்று. மற்ற கடற்கரை நாடுகளுக்கும் இதற்கும் ஓர் வித்தியாசம் இருக்கிறது. இந்நாடு சமுத்திர மட்டத்திற்குத் தாழ்ந்திருக்கிறது. தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாயுமல்லவா? ஆகையால், அந்நாட்டின்மேல் கடல் நீர் பாய்ந்து அதை அமிழ்த்திவிடுமல்லவா? வாஸ்தவந்தான். கடல் உள்ளே பாயாதபடி கடற்கரையோரத்தில் மிகப்பெரியதோர் அணை போடப்பட்டிருக்கிறது. கடற்கரைக்குப் போகவேண்டுபவர்கள் நாட்டின் பக்கமாக உள்ள படிக்கட்டுகளில் ஏறி உயரச் செல்வார்கள். இது ஓர் அதிசயதேசம். அந்நாட்டில் எங்கு கண்டாலும் ஜலம் சுரந்துகொண்டே இருக்கும். ஜலம் வாய்க்கால்கள் மூலம் சேர்க்கப்பட்டு யந்திரங்களால் எப்பொழுதும் இறைக்கப்படும்.

அத்தேசத்து ஜனங்கள் கடற்கரை அணையை எவ்வளவு ஜாக்கிரதையாய்க் காப்பார்கள் என்பதை யோசித்துப் பார்! அவ்வணையின்மேல் காவல்காரர்கள் அநேக இடங்களிலிருந்து அதன் நிலைமையை அடிக்கடி சோதிப்பார்கள். அணை உடைந்தால் ஊர் நாசமாய் விடுமல்லவா?

அவ்வணையில் வேலையிலிருந்தவர்களில் ஒருவருக்கு ஓர் மகன் இருந்தான். அவன் பெயர் பீட்டர். அவன் தகப்பனர் அணைக்கட்டில் வேலையாயிருந்ததால் அடிக்கடி அவ

ரிடம் செல்லுவது வழக்கம். அவன் படிப்பில் அவ்வளவு கெட்டிக்காரனுகத் தெரியவில்லை. விளையாடுவதிலும் பூக்கள் பறித்து மாலையாகத்தொடுப்பதிலுமே ஆவலாக இருந்தான். ஆனல் அவனிடம் ஓர் நற்குணம் உண்டு. அச்சிறு பிராயத்திலேயே அயலாருக்கு நன்மை செய்வதில் நாட்டமுடையவன். ஏழைகளையும் வியாதியஸ்தர்களையும் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் மனம் பதைக்கும். அப்பேர்ப்பட்ட வியாதியஸ்தர்களுக்குத் தன்னலான உதவி செய்யாமலிரான்.

ஒருநாள் சூரியன் அஸ்தமிக்கும் தருணத்தில் அவன் தாயார் அவனை ஏதோ ஓர் காரியத்தை முன்னிட்டு அணைக்கட்டிற்குப் போகும்படி ஏவி, அவனை இருட்டுவதற்கு முந்தியே வீடு திரும்பிவிட உத்திரவிட்டாள். அவள் ஆணையைச் சிரமேற்கொண்டு அவள் சொல்லியபடி அணைக்கட்டிற்குச் சென்று காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பினன்.

திரும்பும்பொழுது இருபக்கமுமுள்ள பூக்களையும் செடி, மரம், கொடிகளையும் பார்த்தான். அவைகள் மாலைச் சூரியனது ஒளியால் பொன்னெனத் தோன்றின. பூக்கள் அவன் மனதைக் கவர்ந்தன. அங்கு நடமாடின பட்டாம் பூச்சிகள் அவன் மனத்தை இழுத்தன. இருட்டிவிடும் என்னும் எண்ணம் அவன் மனதிற்கு வரவில்லை சிறிது சிறிதாக இருட்டிவிட்டது. மாடுகளும், ஆடுகளும் வீட்டுக்குத் திரும்பி விட்டன.

அப்பிள்ளை நேரம் ஆய்விட்டதை அறிந்து வேகமாய் வீட்டிற்குத் திரும்பலானன். வழியில் சலசலவென்று

ஓடுவதுபோல் அவன் காதிற்பட்டது. அவ்வோசை வரும் திக்கை நோக்கி ஓடி சிறிது ஜலம் அக்கடலணையில் ஓர் துவாரத்தின் வழியாய் வருவதைப் பார்த்தான். அதை அடைக்காமல் போனால் கடல் ஜலம் துவாரத்தைச் சிறிது சிறிதாகப் பெரிதாக்கிப் பொழுது விடிவதற்குள் அவ்வூரை நாசம் செய்யும் என்று அவனுக்குத் தெரியும். அருகில் கற்கள் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. ஆகையால் தன் கால்களால் துவாரத்தை அடைத்து ஓடிவரும் ஜலத்தை நிறுத்தினான்.

அவன் எப்படி வீட்டிற்குத் திரும்பமுடியும்? அவன் கால்களை எடுத்தால் ஜலம் ஓடி அணையை உடைத்து ஊரை நாசமாக்கும். ஆகையால் அசையாமல் அங்கேயே இருந்தான். ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்கின. இராப்பக்ஷிகள் கத்தவும், பறக்கவும் ஆரம்பித்தன. கடல், சிங்கம்போல் தலைமேல் கர்ஜித்த வண்ணம் இருந்தது. கால்நோய் அவனால் தாங்க முடியவில்லை. கண்களில் ஜலம் ஆறாகப் பெருகிற்று. என்றாலும் அவன் ஈசனையே துணைக்கொண்டு நின்றான். குளிரினால் தேகம் விறைத்துப் போயிற்று. மனமும் மழுங்கியது. உணர்வற்று அவ்விடம் விட்டு நீங்காது பதுமைபோல் நின்றான். அவன் தாயார் தன் பிள்ளை சற்று நேரம் பொறுத்து வருவான் என்று நினைத்தாள். ஆனால் பாதி இரவு சென்றும் அவன் வராததால் அவனைத்தேடி இங்கும் அங்கும் அலைந்து பார்த்தாள். தன் பிள்ளையின் பெயரைச் சொல்லிக் கூவியும் பார்த்தாள். பதில் காணவில்லை. என்ன செய்வதென்று ஏக்கங்கொண்டாள்.

சிறிது வெளிச்சம் கிழக்கில் தோன்றியது. வேலைக்குப் போகிறவர்கள் வழக்கம்போலத் தங்கள் வேலைக்குச் சென்றார்கள். அப்படிச் சென்றவர்களில் ஒருவன் அணைக்கட்டின்மேல் செல்லவேண்டியிருந்தது. அங்கு சவம்போல் கிடந்த அப்பையன் அருகிற்சென்று நடந்ததை ஊகித்துத், தான் அப்பையனைக் காப்பாற்றி, அணையையும் அடைத்து, வீட்டிற்குக் கொண்டுவந்தான்.

அவன் தாயும் தகப்பனும் மனமகிழ்ந்தார்கள். அவ்வூரார் அவர்களினும் பதின்மடங்கு சந்தோஷித்தார்கள்.

20. சபையில் நடந்துகோள்வதும், பேசுவதும்.

பல பெயர் கூடியுள்ள சபையில் நீ பிரசன்னமாகும்போது பெரியோர்கள் பக்கத்தில் உட்காரவாவது, உயர்ந்த ஆசனங்களில் இருக்கவாவது ஆசைப்படாதே. சபையில் தகாத காரியங்களைச் செய்யாதே. அவையாவன :—நாசித்துவாரங்களில் விரலை விடுதல், மூக்கைச் சிந்துதல், எச்சில் துப்புதல், காதைத் தோண்டுதல் பல்லைக் குத்துதல், கண்ணை நிமிட்டுதல் முதலியனவாகும். இவ்விதமான காரியங்களைச் செய்தல் அவசியமானபோது, சபையை விட்டுச் சற்று அகன்றுபோய், பிரத்தியேகமாய் அப்படிச் செய்துகொள். சபையில் உடம்பைச் சொறிவதும், தலையைச் சொறிவதும், மயிரைக் கோதுவதும் நல்ல வழக்கங்கள் அல்ல. வாயைத் திறந்து கொட்டாவி விடாதே. அப்படி செய்ய அவசியமானால், வாயைக் கையால் மூடிக்கொண்டு

சத்தமில்லாமல் செய். மேற்கண்ட தகாத காரியங்களில் எதைச் செய்தாலும், சபையோர்களுக்கு அருவருப்பு உண்டாகும்.

"அழகலாதன செயேல்"

நீ சபையிலாவது அல்லது தனி மனிதனிடத்திலாவது பேசும்போது, திருத்தமாகவும், அழுத்தமாகவும் பேசு. ஆனால், கூச்சலிட்டுப் பதறிப் பேசாதே. யாரிடத்தில் பேசுகிறாயோ அவர்கள் உன் வார்த்தையைக் கேட்டு, உன் முழுக்கருத்தையும் தெரிந்து கொள்ளுமாறு தெளிவான பாஷையில் பேசவேண்டும். படபட வென்றாவது, அதிக மெதுவாகவாவது பேசாதே.

நீ பேசும்போது தலையைக் குனிந்துகொண்டு பேசுவது நல்லொழுக்கமல்ல. நன்றாய் நிமிர்ந்து பார்த்துக் கொண்டு அடக்கமாகப் பேசவேண்டும். "பேசப்போகிறாயோ, சாகப் போகிறாயோ" என்றதனால், வாயில் வந்தவாறெல்லாம் பேசாமல், வெகு ஜாக்கிரதையாக யோசித்தே பேசல் வேண்டும் "பேச்சு வெள்ளி, பேசாமை பொன்" என்ற ஒரு பழமொழியும் உண்டு. ஆகையால் அனாவசியமாய்ப் பேச்சை வளரவிடாதே, உன்னோடு பேசுகிறவர்களுக்குப் பிரியமில்லாத விஷயங்களைப்பற்றி ஒருபோதும் பேசாதே. மற்றொருவர் பேசிக்கொண்டிருக்கையில், அவர் பேச்சை முடிக்கா முன்னே, நீ பேச ஆத்திரப்படாதே; அவர் சொல்லுவதை முற்றுங் கேட்டுக்கொள்; அப்போது அவரது கருத்து முழுவதையும் நீ தெரிந்து கொள்வாய். அவருக்குத் தக்க விடை கொடுக்கவும் உனக்கு சாத்தியமாகும்.

"ஏயம்பட வுரை"



21. அணில்.

அணில் சாதாரணமாய் நமது வீட்டை அடுத்த விருட்சங்களிலும், காடுகளிலும் வசிக்கும். அது தீங்கற்ற அழகான பிராணி. அதன் தலை உருண்டை வடிவானது; காதுகள் உயர்ந்து முனை குவிந்திருக்கும். கண்கள் பெரியவை. உதட்டில் மீசைமயிரும், வாயில் பற்களும் உண்டு. இதற்குக் கால்கள் நான்கு. பின்னங்கால்களைவிட முன்னங் கால்கள் சிறியவை. அணில்களில் சில சுண்டெலி அளவாகவும், சில பூனையின் அளவாகவும் இருக்கும்.

அணில்கள் பலவகையாக இருந்தாலும் அவை மூன்று இனத்தில் அடங்கும். அவை பறக்குமணில், பெருஞ் செவ்வணில், சிறுநரை அணில் என்பன. பறக்கும் அணில் மரமடர்ந்த காடுகளில் இருக்கும். அதற்கு இறகில்லை;

பறக்க முடியாது. ஆனாலும் இரண்டு பக்கத்திலும் முன் கால்களுக்கு இடையில் ஒரு தடித்த தோல் இருக்கிறது. அதை விரித்துக்கொண்டு ஒரு மரத்திலிருந்து முப்பது நாற்பது அடி தூரத்திலிருக்கும் வேறொரு மரத்துக்குப் பாயும்.

பாய்வதைப்பார்த்தால் பறப்பதுபோலவே தோன்றும். அதனால்தான் அதற்குப் பறக்கும் அணில் என்று பெயர் வந்தது. அது பகலெல்லாம் தூங்கி இரவில் நெடுநேரம் சென்ற பிறகாவது, அதிகாலையிலாவது வெளியேவரும். பெருஞ்செவ்வணில் பார்வைக்கு ஒரு சிறு பூனையைப்போல் இருக்கும்.

நாம் தினந்தோறும் பார்த்துவருவது சிறுநரை அணிலே; அது மரத்தில் இருப்பதும், நிலத்தில் ஓடியாடித்திரிவதும் எல்லாருக்கும் தெரியும். அணில் சாம்பல் நிறமுள்ளது. அதன் முதுகில் மூன்று வெள்ளைக்கோடுகள் உண்டு. அதன் வயிற்றுப்புறத்திலுள்ள மயிர் வெண்மையாயிருக்கும். அதன் வாலில் மயிர் அடர்ந்திருக்கும்.

அது இலை; பழம் முதலியவைகளைத் தின்னும். கொட்டை முதலியவைகளைக் கொறித்துத் தின்னும். அது இரை தின்னும்போது பின் கால்களின்மேல் உட்கார்ந்து முன் கால்களினால் இரையைப்பற்றிக்கொண்டு தன் வாலை மேற்புறமாக உயர்த்திக்கொள்ளும். முன்கால்களே அதற்குக் கைகள்.

அணில் வீட்டின் கூரையில் கூடு கட்டும். பூனையும், பருந்தும் அதைப் பிடிக்க ஆவலாய்க் காத்திருக்கும். அதை

யாராவது பிடிக்கச்சென்றால், அது அவர்களைப் பலமாகக் கடித்துவிடும். குட்டியாக இருக்கும்போதே பிடித்தால், அதை நன்றாகப் பழக்கி வளர்க்கலாம். அதன் மாமிசம் சக்குவான் இருமலுக்குக் கைகண்ட ஔஷதம்.

22. தங்கைக்காக உயிர் நீத்த இளவரசன்.

இங்கிலாந்து தேசத்தை ஆண்ட அரசர்களில் ஹென்றி I என்பவர் ஒருவர். அவருக்கு வில்லியம் என்ற ஒரே மகன் உண்டு. அவரே ஹென்றிக்குப்பின் அரசராக வேண்டியவர். அவரிடத்தில் அரசருக்கு அதிகப் பிரியம்.

அக்காலத்தில் இங்கிலாந்தும், பிரான்ஸ் தேசமும் பகைமை கொண்டிருந்தன. பிரான்ஸ் தேசத்தின் ஒரு பாகமாகிய நார்மண்டியை இங்கிலீஷ் அரசர் ஆண்டு வந்தனர். இது பிரான்சுக்காரருக்குப் பிடிக்கவில்லை. அவர்களை அடக்க ஹென்றி படையெடுத்து பிரான்ஸுக்குப் போனார். நடுவில் சமுத்திரத்தைக் கடக்கவேண்டும். தன்னுடன்கூடத் தன் செல்வப் பிள்ளையாகிய வில்லியம் இளவரசரையும் அழைத்துக்கொண்டு போனார். போனகாரியம் ஜெயமான படியால் பிரான்ஸு தேசத்தரசன் சமாதானம் செய்து கொண்டான். அங்கு சிலநாள் இருந்து, பிறகு இங்கிலாந்துக்கு எல்லாரும் திரும்ப எத்தனித்தார்கள். ஆனால், இளவரசர் கோஷ்டி அரசருடன் வரத் தயாராக இல்லாமையால் அரசர் மாத்திரம் திரும்பி வந்தார். இளவரச

ருடைய கப்பல் பொழுதுபோன பின்தான் சித்தமாயிற்று. சந்தோஷகரமாகத் திரும்புவதால் அக்கப்பலில் இருந்த மாலுமிகளுக்கு இளவரசரின் நண்பர்கள் சாராயம் கொடுத்து விட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு புத்தி சுவாதீனமில்லாமல் போய்விட்டது. கடலில் "வெள்ளைக் கப்பல்" என்ற அந்தக் கப்பலை ஓட்டும்போது வழிதப்பி ஓட்டினுர்கள். திடீரென்று அது தண்ணீருக்குள்ளிருந்த ஒரு பாறையில் மோதிக் கப்பல் உடைந்து விட்டது. வில்லியம் இளவரசரை ஒரு படகில் ஏற்றி முன்னர் அனுப்பிவிட்டார்கள். பரபரப்பு சற்று நின்றதும் இளவரசர் படகில் தன்னுடைய சகோதரி இல்லாமையைக் கண்டு மறுபடி கப்பலருகில் போய் அவளை மீட்பதற்குத் திரும்பிப் போகச் சொன்னுர். அப்படகில் இருந்த மாலுமிகள் மறுபடி படகைக் கப்பலருகில் ஓட்டிச்சென்ருல் படகுக்கு ஆபத்து வருமென்று சொன்னுர்கள். என்ன சொல்லியும் தன் தங்கையை மீட்காமல் திரும்பக்கூடாதென்று பிடிவாதம் செய்து கப்பலருகில் படகை ஓட்ட ஆக்ஞாபித்தார். படகு கப்பலருகில் சென்றவுடன் அநேகர் படகில் குதித்தார்கள். படகு தாங்காமல் முழுகி விட்டது. அதற்குள் கப்பலும் முழுகி விட்டது. அதிலிருந்து பிழைத்தவர் இருவரே. அவர்களுள் ஒருவன் கப்பல் தலைவன். மற்ருருவன் ரூவன் என்னும் பட்டணத்துக் கசாப்புக்காரன். கப்பல் தலைவன் இளவரசர் இறந்ததைக் கேட்டதும் தண்ணீரில் முழுகிப் பிராணனை விட்டான். கசாப்புக்காரன் மாத்திரம் இங்கிலாந்து சேர்ந்து இந்தத் துக்கச்செய்தியை அங்கிருந்தவர்களுக்குத் தெரிவித்தான். ஆனுல் அவர்களில் ஒரு

வருக்கும் அரசருக்கு இதைத் தெரிவிக்கத் தைரியமில்லை. ஒரு சிறு வேலையாளை அரசருக்குத் தெரிவிக்குமாறு ஏற்பாடு செய்தார்கள். அந்தப் பையனும் அழுதுகொண்டே நடந்த செய்தியைச் சொன்னான். அரசர் அதைக் கேட்டவுடன் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தார் என்பதும் சொல்லவேண்டுமா ? அன்றுமுதல் அவர் சாகும் வரையில் அவர் முகத்தில் புன்னகையே கிடையாதென்று சொல்லுவார்கள்.

23. தீரமுள்ள தாவீது.

இஸ்ரேயேல் ஜனங்கள் அநேக வருஷம் கானான் என்கிற தேசத்தில் வசித்து வந்தார்கள். அதேகாலத்தில் பெத்லேம் நகரில் ஏழை ஒருவர் வசித்து வந்தார். அவருக்கு எட்டுப் புத்திரர்கள் உண்டு. அவர்களில் கடைசி பிள்ளையின் பெயர் தாவீது. அந்தச் சிறு பிள்ளை தன் தகப்பனது ஆட்டு மந்தைகளைக் கவனித்து வந்தான். இவனுக்கு நன்றாக வீணை வாசிக்கத் தெரியும்.

இஸ்ரேயேல் ஜனங்களுக்கும், பிலிஸ்தேயருக்கும் ஒரு போர் நேரிட்டது. தாவீது என்பவர் இஸ்ரேயேலரின் கூடாரத்தில் இருந்தார். அப்போது பிலிஸ்தேயரின் தலைமைப் போர்வீரனான கோலியாத் என்பவன் அவர்கள் தங்கியிருக்கும் கூடாரத்திலிருந்து வெளியே வந்தான். அவன் ஒரு இராக்கதன். கொலியாத், இஸ்ரேயேல் ஜனங்களை நோக்கி "நீங்கள் உங்களுக்குள் ஒரு போர் வீரனைத் தேர்ந்து கொள்ளுங்கள். அவன் என்னோடு சண்டை

செய்யட்டும். அவன் என்னைக்கொன்றால் நாங்கள் எல்லோரும் உங்களுக்கு அடிமையாவோம். நான் அவனைக் கொன்றால் நீங்கள் யாவரும் எங்களுக்கு அடிமையாக வேண்டும்” என்றான். இதைக் கேட்டதும் ஒருவருக்கும் அந்த இராக்கதனோடு சண்டை செய்யத் தைரியம் இல்லை. அப்போது தாவீது என்பவர் சிறு பையனாகயிருந்த போதிலும் கொலியாத் என்பவனோடு சண்டை செய்ய மனந்துணிந்தார்.

தாவீது தன் கையில் ஒரு தடியையும் நதிக்கரையிலுள்ள ஐந்து கூழாங்கற்களையும் ஆட்டிடையர்கள் வைத்திருக்கும் ஓர் தோல் பையில் வைத்துக்கொண்டும், கவண் கயிற்றைத் தன் கையில் வைத்துக்கொண்டும் கொலியாத் முன் நின்றான். அப்போது கொலியாத் ஒரு கையில் ஈட்டி தாங்கியையும், மற்றொருகையில் ஈட்டியையும் வைத்துக் கொண்டிருந்தான். கொலியாத் தாவீதைப் பார்த்து “நீ கையில் தடி வைத்துக்கொண்டு ஒரு நாயை அடிப்பது போல் வருகிறாய். நான் நாயா ?” என, தாவீது, ‘நீ கையில் ஈட்டி தாங்கியையும், ஈட்டியையும், உடைவாளையும் வைத்துக் கொண்டு என்னுடன் சண்டை செய்ய வருகிறாய். நான் கடவுளின் வல்லபத்தை நம்பி உன்னோடு சண்டையிட வருகிறேன்’ என்று சொல்லி, தாவீது தன் தோற்பையிலுள்ள கற்களில் ஒன்றை எடுத்துக் கவண் கயிற்றில் வைத்துக் கொலியாத்தென்பவன் மேல் வீசினார். வீசவும் அந்தக் கல் கொலியாத்தின் நெற்றியில் தாக்கினதால் குப்புறக் கீழே விழுந்தான். உடனே தாவீது ஓடிப்போய், கொலியாத்தின் உறையிலிருந்த அவன் வாளையே யுருவி அவன் கழு

த்தைத் துண்டித்தார். பிலிஸ்தியர்கள் ஓட்டம் பிடித்தார்கள்.

பிறகு அவ்வூர் அரசன் தாவீது என்பவரை ஆயிரம் ஜனங்களுக்குத் தலைவனாக நியமித்தார். ஜனங்கள் யாவரும் அவரை நேசித்தார்கள். கடவுளும் அவரை ஆசிர்வதித்தார். பிறகு சிறிது நாட்களுக்கெல்லாம் அவரே அரசரானார். அவர் இஸ்ரயேல் ஜனங்களின் விரோதிகளை ஜயித்து ஜருசலேம் நகரைப் பிடித்து அதை அவருடைய இராஜ்யத்துக்குத் தலைநகரமாக்கினார்.

24. திருவள்ளுவர்.

சாதாரணமாக நாம் ஒரு கருத்தையோ, ஒரு நீதியையோ தெரிவிக்கவேண்டுமானால் அநேக வார்த்தைகளால் அதை விளங்க வைக்கவேண்டியிருக்கிறது. சிலருக்கு மூன்று நான்கு பக்கங்கள் எழுதியும் முழுக்கருத்தையும் விளக்கமாய்த் தெரிவிக்க முடிவதில்லை. ஆனால் சிலருக்குத் தங்கள் கருத்தையோ, தாங்கள் சொல்லவேண்டியவைகளையோ வெகு சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல முடியும். அவர்களுள் காதுக்கு இனிமையான பாடல்களால் தங்கள் கருத்தைத் தெரிவிக்கிறவர்கள் புலவர்களாவார்கள். பலர் தங்கள் கருத்தை வெளியிட நான்கு அல்லது மேற்பட்ட அடிகளையுடைய செய்யுள்களை இயற்றுவார்கள். ஒரு சிலரே இரண்டடியில் விளக்க வல்லவர்கள். அரிய, உயரிய கருத்துக்களை இரண்டடியுள்ள குறட்பாக்களில் விளக்கியவர் திருவள்ளுவர்.

இவர் வெகுகாலத்திற்கு முன் சென்னையின் ஒரு பாக மாகிய மயிலாப்பூரில் வசித்து வந்தார். இவர் மதுரையில் இருந்த கடைச்சங்க காலத்தில் இருந்ததாகச் சொல்லு கிறார்கள்.

இவர் பகவன் என்ற பிராமணனுக்கும், ஆதி என்ற புலைச்சிக்கும் பிறந்ததாகக் கூறுவார்கள். இவருடன் பிறந்த வர்களெல்லோரும் மிகப் புகழ் பெற்றவர்கள். இவர்கள், உப்பை, ஔவை, உறுவை, வள்ளி, என்ற பெண்மணி களும், அதிகமான், கபிலர் என்ற ஆண்மக்களுமாவர். இவர் களுடைய பெற்றோர் இவர்களை அவரவர் பிறந்த இடத்தி லேயே விட்டுச்சென்றனர் என்றும், ஒவ்வொருவரையும் சிற்சிலர் எடுத்து வளர்த்தனர் என்றும், சொல்லுவார்கள்.

திருவள்ளுவர், மயிலாப்பூரில் ஒரு வள்ளுவர் வீட்டில் வளர்ந்தார் என்பர். கல்விபயின்று பொய்யாமொழிப் புலவ ரென்று எல்லோருங்கொண்டாடும்படி சிறந்து விளங்கினர். தக்கவயதில் கற்பிற் சிறந்த வாசுகியார் என்பவரை மணந் தார். இவர்கள் சற்றேனும் ஏறுமாறின்றி இல்வாழ்க்கை நடத்தியதும், வாசுகியாரின் கற்பு நிலைமையும், இன்றும் சிறப்பாகப் புகழப்படுகின்றன. ஆனால் வாசுகியார், திரு வள்ளுவர் காலத்திலேயே மரணமடைந்தார். இம்மரணத் தைக் குறித்து வெகு உருக்கமாக ஒரு செய்யுள் இயற்றி யிருக்கிறார்.

அவர் செய்த திருக்குறள் 1330 செய்யுள்கள் உள் ளது. அக்காலத்திருந்த பெரும்புலவர் நிறைந்த மதுரைச் சங்கத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது. ஆண்டமர்ந்த அரும்புலவர் பலரும் இவரது குறளை வியந்து திருவள்ளுவ

மாலை என்னும் நூலொன்று இயற்றினார்கள். நீவிர் அதை வாசிக்கும் பொழுது அத்திருக்குறளின் அழியாப்பெருமை யுணர்ந்து ஆனந்திப்பீர்களென்பதில் ஒரு சிறிதும் ஐய மில்லை.

இந்நூல் அனேக பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுக் கற்கப்படுவது இதன் சிறப்பைக் காட்டுகிறது. இவ் வளவு சிறப்புற்றோங்கியும் தன்கையால் நெசவுத்தொழில் செய்து அதில் வரும் ஊதியத்தைக்கொண்டே வசித்து வந்தார். இவருக்கு ஏலேலசிங்கர் என்றொரு சிடர் இருந்தார். இவர் மரணத்தருவாயிலிருக்கும்போது அவ ரைக் கூப்பிட்டுத் தன்னுடைய உடலை அடக்கம் செய்யாமல் நாய்களும் நரிகளும் தின்னும்படி விட்டுவைக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டாராம். அப்படியே அவரும் செய்தார் என்பர்.

அவரது உருவச்சிலையை மயிலையிலுள்ள ஆலயத்தில் இன்றுங் காணலாம்.

25. அவதூறு.

ஒருவரைப்பற்றி இல்லாததை உண்டென்றும், உள்ளதை இல்லையென்றும் பிறரிடத்தில் சொல்லுவது அவதூறு. இது ஒரு பெரிய குற்றம். ஏனென்றால், பிறருடைய நல்ல பெயரை ஒரு தடவை கெடுத்துவிட்டால், திரும்பவும் அதை அவர்கள் பெறும்படிச் செய்வது பெருங்கஷ்டம். நீ எவ்விதமாக உன் பெயர் கெட்டுப் போகாமல் அதைக் காப்பாற்ற விரும்புவாயோ, அவ்விதமாகவே பிறருடைய பெயரும் கெட்டுப் போகாதபடி அதைக் காப்பாற்ற வேண்டும். பிறரைப்பற்றி ஒருவனிடம் அவதூறு சொன்னால் அது அவனிடத்தில் மாத்திரம் தங்கி இராது; வெகு சீக்கிரத்தில் பல இடங்களிலும் பரவி விடும். இது சம்பந்தமாக ஒரு சிறு கதை உண்டு. அதாவது :—


ஒரு மனிதன் மற்றவர்களைப்பற்றி எக்காலத்திலும் அவதூறு பேசிக்கொண்டே இருந்தான். அவதூறு பேசுவதே அவனுக்கு வழக்கம். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு சந்நியாசி அவனைக் கூப்பிட்டு, அவனிடம் பல பக்ஷிகளின் இறகுகளைக் கொடுத்து, அவைகளைப் பல தெருக்களில் ஒவ்வொன்றாகப் போட்டுவிட்டு வரும்படி கட்டளையிட்டார். அவன் அப்படியே செய்துவிட்டு, அந்தச் சுவாமியாரிடம் திரும்பி வந்து, "மேலும் என்ன செய்யவேண்டும்" என்று அவரைக் கேட்டான். அதற்கு அவர் தாம் முன்னே தெருக்களில் போடுமாறு கொடுத்த இறகுகளை யெல்லாம் மறுபடியும் பொறுக்கிக்

கொண்டு வரும்படி அவனுக்கு உத்திரவிட்டார். அவன் அப்படியே போய் இறகுகளைப்போட்டவிடங்களில் பார்க்குமளவில், அவைகளை அங்கு கண்டுபிடிக்கக் கூடவில்லை. அவைகளெல்லாம் எங்கெங்கேயோ பறந்து போய்விட்டன. அம் மனிதன் உடனே சந்நியாசியாரிடம் வந்து, இறகுகள் அகப்படவில்லை யென்றும், அவைகள் காற்றில் பறந்து போய்விட்டனவென்றும் சொன்னான்.

அதைக் கேட்ட சுவாமியார் சொன்னதாவது "தம்பி! நீ எப்போதும் அயலார்பேரில் அவதூறு பேசிக் கொண்டிருக்கிறாயல்லவா? இறகுகளை வெளியில் எறிந்த மாதிரி நீ உன் வாயை விட்டுக் கொட்டின அவதூறான வார்த்தைகளெல்லாம் வெளியில் வெகு தூரம் பறந்து பரவிக்கொண்டிருக்கின்றன. பறந்துபோன இறகுகளை மறுபடியும் எப்படிச் சேகரிக்க முடியாதோ, அதே வண்ணம் நீ சொன்ன அவதூறுகளை மறுபடியும் கூட்டிச் சேர்க்க முடியாது; அழிக்க முடியாது. நீ அவதூறு பேசினவர்களுடைய பெயரெல்லாம் விமோசனத்துக்கிடமின்றி அநியாயமாய்க் கெட்டுப்போய் விட்டன. ஒருவன் பணத்தை அல்லது பொருளை நாம் அபகரித்துக்கொண்டால், அவனுக்குப் பதில் பணமும் பொருளும் வெகு சுலபமாகக் கொடுத்து விடலாம். ஆனால், ஒருவன் பெயரைக் கெடுத்துவிடுவோமானால் அதை நாம் திரும்பக் கொடுப்பது அசாத்தியம். அதற்குக் கடவுள் தண்டனையும் கடினமாயிருக்கும். ஆகையால் நீ பிறர்மேல் அவதூறு ஒருபோதும் பேசாதே". என்றார்.

பிள்ளைகளே! மேற் சொன்ன கதையில் சுவாமியார் அந்த மனிதனுக்குச் சொன்ன புத்தியை நீங்களும் கவனித்து நடக்கவேண்டும். பிறர்மீது அவதூறு பேசுங் குணம் மகா ஈனமான குணம். அக்குணத்தை நல்லவர்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள்.

"காணாத வார்த்தைகளைக் கட்டுரைக்க வேண்டாம்".



26. காண்டாமிருகம்.

காண்டாமிருகம் இந்தியாவிலும், ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள உஷ்ணப்பிரதேசங்களிலும் உள்ள சேறு நிறைந்த சதுப்பு நிலங்களில் வசிக்கும். இது, உடல் வன்மையிலும், உருவத்திலும் யானைக்கு அடுத்தபடியாய் உள்ளது. சற்றேறக்குறைய யானையின் அளவாகவே இருக்கும். சுமார் பத்துப்பன்னிரண்டு அடி நீளமும், ஐந்து ஆறடி உயரமும் உள்ளது. கால்கள் குட்டையானவை. அதன் மூக்கின்

மேற்புறத்தில் கொம்பு ஒன்று உண்டு. அதன் மேலுதடு நீண்டு குவிந்திருக்கும். அதன் மேல்தோல் உறுதியானது; அதன்மேல் உரோமக் கவசம் கிடையாது. அதன் கால் ஒவ்வொன்றிலும் மும்மூன்றாகப் பிளவுபட்ட குளம்புகள் உண்டு. கால்களின் மேற்புறத்தில் தோல் மடிந்து, படிந்து தொங்கும். தோல் கருமையும் பசுமையும் கலப்பாயிருக்கும். இந்தியாவிற் காணப்படும் காண்டாமிருகங்களுக்கு மூக்கில் ஒரு கொம்பு உண்டு. சிலவற்றிற்கு இரண்டு கொம்புகளும் உண்டு. ஒவ்வொன்றும் மும்மூன்று அடி நீளமிருக்கும்.

அதன் தோல், முதுகிலும் பக்கங்களிலும் இரண்டு அங்குல கனமுள்ளது. அவ்வுறுதியான தோல் துப்பாக்கிக் குண்டுக்கேயன்றி மற்றெதற்கும் அசையாது.

இலை, தழை, காய், கனி, கிழங்கு முதலியவைகள் இதற்குச் சிறந்த உணவு. சில சமயங்களில் அது முதலையையும் பிடித்துத் தின்பதுண்டு. எந்த விலங்கும் புசிக்க முடியாத முட்செடிகளையும் இன்பமாகத் தின்னும்.

இது இயல்பில் எதற்கும் தீங்கு செய்வதில்லை. ஏதேனும் ஒரு விலங்கு தன்னை எதிர்க்க வருமாயின், அதனைக் கண்டு அஞ்சி ஓடாமல், வீராவேசங்கொண்டு எதிர்த்து நிற்கும். தன் சத்துருவின் வரவை மோப்பத்தால் தெரிந்து கொள்ளும். அது சூட்சுமமான பார்வையுடையது. இது எப்பொழுதும் தலை குனிந்தே நடக்கும்.

இதைப் பிடிக்க வேட்டையாடுவது எளிதான செயலன்று. அது ஓடத்தலைப்பட்டால், அதைப் பின்பற்ற

எவராலும் முடியாது. பெரிய முட்புதர்களையும் எளிதில் தாவித் தாண்டிச் செல்லும். எவ்வளவு அடித்தாலும், அதன் உடம்பில் உறைப்பதில்லை. வெடிகுண்டுகள் உடலில் தைத்தாலும், அது சட்டை செய்யாது. தொடைகளின் மேற்புறம், இருதயம் முதலிய இடங்களில் குண்டு பட்டால் துடிதுடித்து அலறும்.

இத்தகைய விலங்கையும் வருத்தி வதைக்கக்கூடிய சிற்றுயிர்களும் உண்டு. ஈ முதலிய பூச்சிகள், மடிந்த தோலுக்குள் புகுந்து தொளைத்து, உள்ளே செல்லும். அதனால், அதற்கு அதிக உபத்திரவம் உண்டாகும். ஆதலால் பகற்காலத்தில் சேற்றுநீரில் இறங்கி, அச்சேற்றை உடல் முழுதும் பூசிக்கொள்ளும். அப்போது, தோலுக்குள் சென்ற பூச்சிகள் மூச்சுவிடமுடியாமல் திணறி இறந்து விடும்.

இதன்தோல் சிற்சில குதிரைச்சாமான்களும், 'கேடகம்' என்னும் கருவியும் செய்ய உதவும்.



27. சாரணச் சிறுவன்.

சாரண இயக்கம் மூன்று பிரிவினையுடையது. முதல் பிரிவாகிய இளவோநாய்க் குட்டிகளைப்பற்றி நீங்கள் முன்பே படித்திருக்கிறீர்கள். இரண்டாவது பிரிவு ரோவர் சாரணன்.

இந்த இயக்கத்தில் சேர்ந்து நல்ல பலன் அடைய வேண்டுமானால் ஒருவன் இளவோநாய்க் கோஷ்டியில் முதலில் சேர்ந்து இளஞ்சாரணனாகி ரோவர் சாரணனாக வேண்டும். ஆனால், எந்தப் பகுதியிலும் வயதுக்குத் தகுந்தாற் போல் நேராகவும் சேரலாம். இவ்வியக்கத்தை முதன் முதலில் லார்ட் பேடன் பவல் என்ற பெரியார் ஸ்தாபித்தார்.

இளஞ்சாரணனைச் சேர விரும்பும் சிறுவனுடைய வயது பதினொன்று முதல் பதினெட்டு வரையில் இருக்கலாம். சேருவதற்கு முன் அவனுக்குச் சில விஷயங்கள் தெரிந்திருக்கவேண்டும். அவை சாரணச் சட்டங்களும், விதிகளும், ஆறுவகை முடிச்சுகளும், யூனியன் ஜாக்கின் அமைப்பும், அதைச் சரியாகப் பறக்கவிடும் முறையும், சாரணத்தடியின் உபயோகங்களுமேயாம். சாரண ஆசிரியர் அவனுக்குத் தெரிந்ததைப் பரீக்ஷித்து அவனை இயக்கத்தில் சேர்த்துக்கொள்வார். இப்படிச் சேரும்போது அவனுக்கு இளம்பாதன் என்று பெயர். மேன்மேலும் அவன் உபயோகமான விஷயங்களைத் தெரிந்துகொண்டு இரண்டாவது வகுப்புச் சாரணனாகவும், பிறகு முதல் வகுப்புச் சாரணனாகவும், அதன்பின் உயர்ந்த வகுப்பாகிய அரசச் சாரணனாகவுமாகத் தேர்ச்சி பெறவேண்டும். அவன் இதற்குள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைக் கவனித்தால், பிறருக்கு எவ்வித வழியிலும் தொண்டு செய்வதற்கு உபயோகப்படக் கூடியவைகளாகவே இருக்கின்றன.

இளவோநாய்க் குட்டியைப்போல் அவனும் சாரணனாகச் சேரும்போது தான் கடவுளிடத்தும், அரசனிடத்தும், தேசத்தினிடத்தும் விசுவாசமுள்ளவனாகவும், எக்காலத்திலும் பிறருக்கு உதவி செய்பவனாகவும், சாரண விதிகளை அனுஷ்டிப்பவனாகவும் இருப்பதாக வாக்குறுதி செய்து கொடுக்கவேண்டும்.


சாரணன் என்போன், தன் வார்த்தையில் பிறர் எப்பொழுதும் நம்பிக்கை வைக்கும்படியாக நடந்து கொள்வான். கடவுளிடத்தும், அரசனிடத்தும், தேசத்தினிடத்

தும், பெரியோர்களிடத்தும், எளியோரிடத்தும் விசுவாச முள்ளவனுகயிருப்பான். எக்காலத்திலும் பிறருக்கு உதவி செய்வதையே முதற்கடமையாகக் கருதுவான். ஜாதி, மதவித்தியாசம் பாராமல் எல்லோரையும் தன் சினேகிதர்களாக மதிப்பான். எப்பொழுதும் யாவரிடத்தும் மரியாதையாக நடந்துகொள்வான். பிராணிகளிடத்தில் பட்சமாக இருப்பான். பெற்ருேர், சாரண ஆசிரியர், அணித்தலைவன் ஆகிய இவர்களது கட்டளைக்கு எதிர்த்துச் சொல்லாமல் கீழ்படிவான். எந்தக் கஷ்டம் வந்தாலும் புன்சிரிப்போடு மனமுவந்து வேலை செய்வான். சிக்கனமாக இருப்பான். மனோவாக்குக் காயங்களில் பரிசுத்தமாக இருப்பான். இப்படி இருப்பவனே சரியான சாரணன். ஆகையால், இப்படியிருக்கச் சம்மதிப்பவன் முதலில் இளம்பாதனுகிருன். இரண்டாம் வகுப்புச் சாரணுக, முதலுதவி செய்யவும், சமையல் செய்யவும், ஒரு மணியில் ஐந்துமைல் களைப்பில்லாமல் ஓடவும், எட்டணுவாவது சேவிங்ஸ் பாங்கியில் சேமித்து வைக்கவும், உற்றுப்பார்த்த ஒரு வஸ்துவை ஞாபகத்தில் வைக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளை அறிந்தால் "தயாராயிரு" என்ற எழுத்துக்களைக் கொண்ட சின்னத்தை அணியலாம். இதே மாதிரி முதல் வகுப்புச் சாரணுவதற்கும், அரசச்சாரணுவதற்கும் அநேக முறைகளில் பயிற்சி பெறவேண்டும்.

சாரணன் உடுக்கும் உடையும், அவன் செய்யும் வந்தனமும் அவனுடைய நோக்கத்தை விளக்குகின்றன. மூன்று விரலை நிமிர்த்தி வந்தனம் செய்வான். அம்மூன்று விரல்கள் அவனுடைய மூன்று வகைப்பட்ட வாக்குறுதியைக்

குறிக்கும். அவனுடைய கழுத்துப்பட்டையில் ஒரு முடிச்சு இருக்கும். அது ஒவ்வொரு நாளும் ஒரு நல்ல காரியமாவது செய்யவேண்மென்று அவனுக்கு ஞாபகப் படுத்தும்.

சாரணனைச் சேர்ந்தால் ஒருவன் தன்னுடைய தேக வலிமையையும், மனோதைரியத்தையும் தன் நம்பிக்கையையும் பெருக்கிக்கொள்ளலாம். இந்த இயக்கத்தின் முக்கியமான கருத்து பிறருக்கு உதவியாயிருப்பதே. அதற்காக வெளியில் போய் புது இடத்தில் சஞ்சரிக்கப் பயிலவேண்டும். இந்த இயக்கத்தினால் ஒருவன் பள்ளிக்கூடங்களில் கற்க முடியாத அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்வதுடன் எல்லோரிடத்தும் மரியாதையாகப் பழகுவதால் நல்ல ஸ்திதியை அடைகிறான். காலத்தை வீணாகச் செலவழிக்க அவனுக்கு ஏது இல்லாமையால் அவன் நன்றாகப் படிப்பதுடன் சன்மார்க்கனுமாகிறான்.



28. விடா முயற்சி.

நீ இந்தப் பூச்சியைப் பார்த்திருக்கிருயா? அது என்ன செய்கிறது? அது தன்னிடமுள்ள மெல்லிய நூலினுல் ஒரு வலே பின்னுகின்றது. எதற்காக அந்த வலேயைக் கட்டுகின்றது? அது சாப்பிடக்கூடிய ஈ, புழு, பூச்சி முதலியவைகளே அந்த வலேயால் பிடித்துக்கொள்ள அதைக் கட்டுகின்றது. இந்தச் சிலந்திப்பூச்சி ஒரு வீட்டு மூலேயில் ஒரு வலேயைக் கட்டிற்று. அதை அந்த வீட்டிலிருக்கும் ஒரு சிறுவன் பார்த்து அறுத்துவிட்டான். மறுபடியும் அந்தப் பூச்சி அன்றைய சாயங்காலத்திற்குள் புதிய வலே ஒன்றை அதே இடத்தில் கட்டிற்று. பையன் அதைப்


பார்த்து மறுபடியும் அறுத்துவிட்டான். மறுநாள் காலையில் அவன் அங்கு வந்து பார்க்கும்போது, மற்றொரு புதிய வலை பின்னப்பட்டிருந்தது. அந்த வலை அதிகாலையில் அங்கு எப்படி வந்தது? சிலந்திப்பூச்சி இரவிலேயே அதைக் கட்டியிருக்கவேண்டும். பையன் வலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். மேலும் மேலும் அவன் அதை அறுத்துக்கொண்டே வந்தான். சிலந்தியும் புதிய புதிய வலைகளைக் கட்டிக்கொண்டே வந்தது. கடைசியாகப் பையனுக்கு அலுப்பாய்விட்டது. சிலந்திக்கோ அலுப்பேயில்லை. அது விடாமுயற்சியாய் வலையைக் கட்டிக்கொண்டே வந்தது.

பிள்ளைகளே! சிலந்தியினுடைய விடாமுயற்சியைக் கவனியுங்கள். அது எவ்வளவு கஷ்டப்பட்டு வலையைக் கட்டிக்கொண்டே வந்தது பாருங்கள். அது சலிப்புக் கொண்டு மத்தியில் வலையைக் கட்டாமல் சோம்பேறித்தனமாய் இருந்திருந்தால், அதன் கதி என்னவாயிருக்கும்? அதற்குத் தங்க இடமில்லாமலும், ஆகாரம் அகப்பட வழியில்லாமலும் பசியினால் இறந்து போயிருக்கும். சிலந்திப் பூச்சியைப்போலவே சில பிள்ளைகள் செய்கிறார்கள். அவர்கள் படிப்பு விஷயத்தில் எத்தனை தடவை படித்தாலும் பொருள் விளங்காவிட்டால் "கற்கக் கற்கக் கசடறும்" என்பதை உத்தேசித்து, திருப்பித்திருப்பிப் படிப்பார்கள். அவர்கள் தங்கள் பாடத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளுகிறவரையில் அப்படியே செய்வார்கள். ஆனால், வேறு சில பிள்ளைகள் ஒரு பாடம் படிக்கும்போது அந்தப் பாடம் சரியாய்த் தெரியாவிட்டால், நடுவில் சோர்ந்துபோய் அதை

விட்டுவிடுவார்கள். அப்படி விட்டுவிட்டால், அவர்கள் சோம்பேறிகளாகி எடுத்த கருமம் எதுவும் ஈடேறாமல் எப்பொழுதும் கஷ்டப்படுவார்கள்.

பிள்ளைகளே! நீங்கள் படிப்பில் மாத்திரமல்ல, மற்ற எந்த விஷயங்களிலும் விடாமுயற்சியோடு வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் நீங்கள் தொடங்கும் காரியங்களில் சித்தியடைந்து உலகத்தில் சந்தோஷமாக வாழ முடியும். கௌரமாகவும் ஜீவிப்பீர்கள்.

"ஊக்கமது கைவிடேல்".



29. தேனீக்கள்.

தேனீயானது பூச்சிவகைகளில் ஆச்சரியமானது. அது ஊக்கத்திலும் ஞானத்திலும் மற்றெல்லாவற்றிலும் சிறந்தது. அது சதா வேலைசெய்துகொண்டேயிருக்கும். அதிக ஊக்கமுடைய ஒருவனைத் தேனீயைப்போல் உழைக்கிறான் என்று சொல்லுவது வழக்கம்.

தேன்கூடு ஒவ்வொன்றிலும் மூன்று வகையான தேனீக்கள் உண்டு. அவை இராணி ஈ, வேலைசெய்யும் தேனீ, சோம்பேறித் தேனீ.

ஒவ்வொரு கூட்டிலும் ஒரு இராணி ஈதான் இருக்கும். மற்ற ஈக்கள், அதை அதிகமாய்ப் பூஜித்து, அதற்கு வேண்டிய உணவைக் கொடுக்கும். இராணி ஈ ஆயிரக்கணக்

கான முட்டைகள் இடும். மற்ற ஈக்களைவிடத் தேனீ மிகவும் பெரியது.

சோம்பேறி ஈக்களுக்கு ஆகாரம் புசிப்பதுதான் வேலை. அவைகளை வேலைசெய்யும் ஈக்கள் மழைக்கால ஆரம்பத்தில் கூட்டிலிருந்து வெளியே துரத்திவிடும். வேலை செய்யும் ஈக்களுக்குக் கூர்மையான கொடுக்கு உண்டு. சோம்பேறி ஈக்களுக்குக் கிடையாது.

வேலைசெய்யும் ஈக்கள் ஒருவிதமான மெழுகைச்செய்து அதனால் கூடுகட்டும்; தேனையும் சேகரிக்கும். அந்த மெழுகு அவைகளின் உடம்பிலேயே உற்பத்தியாகிறது. ஒவ்வொரு பூவினிடமும் சென்று துளித்துளியாகத்தேனைக் கொண்டுவந்து, கூட்டின் சிறு துவாரத்தை அடைத்துவிடும்.


மனிதர்கள் தேனீக்களுக்காக மாதிரிக்கூடுகளும் கட்டுவதுண்டு. அவைகளை வைக்கோற்புரியினலும், கோரையினலும் செய்து தேனீக்கள் போகவர அக்கூட்டின் அடியில் ஒரு சிறு சந்து விடுவார்கள். அதில் தேனீக்கள் தேனைச் சேர்க்கும். சேர்ந்த தேனைத் தங்களுக்கு வேண்டிய அளவு எடுத்துக்கொள்வார்கள்.

தேன்கூட்டில் அநேக சிற்றறைகள் உண்டு. அவைகள் ஒவ்வொன்றும் ஆறு சுவர்களையுடையது. அந்த அறைகளில்தான் தேனைச் சேர்க்கும்.

தேனீக்கள் தாம் கஷ்டப்பட்டுச் சேர்த்த தேனைத் தாம் உண்ணுவதில்லை. அயலாரே அதைக் கைக்கொண்டு இன்புறுகிறார்கள். இதனல், தாமும் அனுபவியாமல் பிறர்க்கும்

கொடாமல் பொருளைச் சேர்த்து வைப்பவர்கள் பொருள் இழந்தவர்களாவார்கள் என்பதற்குத் தேனீயைப் புலவர் கள் சாட்சியாகக் கூறுவார்கள்.

> உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும்
> கெடாஅத நல்லறமும் செய்யார்—கொடாஅது
> வைத்தீட்டினர் இழப்பர் வான்தோய் மலைநாட!
> உய்த்தீட்டும் தேனீக் கரி.



30. கற்பலகை.

சிறுவர்களே! நீங்கள் தினம் எழுதும் பலகைக்கு சிலேட்டு என்று பெயரல்லவா? ஒவ்வொருவரும் ஒரு பலகை கொண்டுவருகின்றீர்கள். பலகை இல்லாவிட்டால் நீங்கள் எதையும் எழுதமுடியாது. கணக்குப் போடவும் முடியாது. பலகை இல்லாவிட்டால் கடிதத்தில் எழுதக் கூடாதா? நீங்கள் சிறுவர்களாதலால் இப்போது கடிதத்தில் எழுதுவது உங்களுக்குக் கஷ்டமாயிருக்கும். அப்படி எழுதினாலும் மறுபடி எழுத வேறு கடிதம் வேண்டும். தப்பிதம் ஏற்பட்டாலும் அதை அழித்துவிட்டு மறுபடியும் அதில் எழுத முடியாது. ரப்பர் கொண்டு அழித்தாலும் அவ்வளவு சுத்தமாயிராது. அதற்கும் ரப்பர் வைத்திருக்க வேண்டும். ஒரு நாளைக்கு உபாத்தியாயர் எட்டு கணக்கு

கற்பிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம்; இதைக் கடிதத்தில் போடுவதானால் கடிதம் அதிகமாய் வேண்டியிருக்கும். தினம் இரண்டு கடிதம் வீதம் செலவானாலும் மாதம் ஒன்றுக்கு அநேக கடிதங்கள் வேண்டுமல்லவா ? அவை அதிக விலையாகும். பலகையானால் விலையும் குறைவு. உடையாமல் ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டால் வருஷக்கணக்காய் உபயோகப்படும். பலகையில் எழுதுவதை அப்போதைக்கப்போது அழித்துவிடலாம். மறுபடி சுலபமாய் எழுத உதவும். எத்தனைதரம் அழித்து எழுதினாலும் பலகைக்குக் கெடுதியில்லை. ஆகையினால்தான் உங்கள் பெற்றோர்கள் உங்களுக்குப் பலகை வாங்கிக் கொடுக்கிறார்கள்.

இந்தப் பலகைகள் எப்படிக் கிடைக்கின்றன என்று கேட்டால் கடையில் வாங்குகிறோம் என்றுதான் பதில் சொல்லுவீர்கள். அப்பலகைகள் கிடைக்கும் விதத்தை ஆராய்வோம். சிலேட் என்பது ஒரு தாதுப்பொருள். அது சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படும். அது நமது மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியார் வசிக்கும் இங்கிலாந்தில் அகப்படுகிறது. அதற்கருகிலுள்ள ஸ்காத்லாந்து தேசத்திலும் ஏராளமாய்க் கிடைக்கும்.

அதை எடுக்கும்போது மிக்கக் கனமுள்ளதாயிருக்கும். அது இலேசாயிருக்கும்படி தகடுகளாகப் பிளப்பார்கள். சிறு துண்டுகளாகவும் துண்டிப்பார்கள். நீங்கள் எழுதும் பலகை இவ்வாறு பிளந்து துண்டிக்கப்பட்ட ஒரு சிறு துண்டுதான். பலகை உடையாதிருக்கும்பொருட்டு அதற்கு மரச்சட்டம் போடப்பட்டிருக்கிறது.

நமது தேசத்தில்தான் இப்பலகைகள் எழுதுவதற்கு மட்டும் உதவுகின்றன. ஐரோப்பாவில், சிலேட்டுகள் வீடுகளுக்கு மேல்கூரையாக உபயோகிக்கப்படுகின்றன. நாம் உபயோகிக்கிற ஓடுகளுக்குப் பதிலாக அங்கு இப்பலகைகள் உதவுகின்றன. இப்பலகைகள் ஓடுகளைவிட இலேசானவை. விலையும் சொற்பம்.

இப்போது சில இடங்களில் சிலேட்டானது தண்ணீர்த் தொட்டிகளிலும், குளிக்குமிடங்களிலும் தளத்துக்கும் உபயோகப்படுகின்றன.

இது கறுப்புக்கலந்த சாம்பல் நிறமுள்ளது. இதைச் செங்கல்லோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது மெதுவானது. செங்கல்லோ கரடு முரடானது.

31. நெற் பயிர்.

உலகத்தில் மானிடர்களுக்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாகிய பொருள்களுள் உணவு ஒன்று. அவ்வுணவுப் பொருள்கள் பலவாம். அவற்றுள் நம் நாட்டில் அரிசியே சிறந்த உணவுப் பொருள். கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு முதலியனவும் உணவுப் பொருள்களே. கடலை, துவரை, உளுந்து, எள்ளு முதலிய தானிய வகைகளும் உணவுக்குரிய பொருள்களாயிருப்பினும் அரிசிதான் முதன்மையாயிருக்கிறது. அவ்வரிசி நெல்லினின்றும் பெறப்படுகிறதல்லவா? ஆகையின், அந்நெல் பயிரிடும் விதத்தை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

இந்நெற்பயிர் விளையும் நிலத்தின் வரியே நமது இராஜாங்கத்துக்கு முக்கிய வருவாய். ஆனதுபற்றி நமது இராஜாங்கத்தார், இப்பயிர்த் தொழிலை விருத்தி செய்யக் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றார்கள். இத்தொழில் விருத்திக்கு அவசியமான நவீன முறைகளை இராஜாங்கத்தார் கற்பித்து வருகிறார்கள். அவ்வப்போது புதுமாதிரியான எருக்களையுங் கண்டுபிடித்து வருகிறார்கள். இத்தொழிலுக்கு வேண்டிய மூலாதாரமான நீர்நிலைகளை நன்னிலையில் இருத்திப் பரிபாலித்து வருகிறார்கள். குடிமக்கள்மீது வைத்த கருணையினால் இராஜாங்கத்தார் இத்தொழிலுக்ாகப் புரிந்துவரும் நன்மைகள் எண்ணிறந்தவை.

விளைநிலங்களை இருவகையாகப் பிரித்திருக்கிறார்கள். அவை நன்செய், புன்செய் எனப்படும். புன்செய் நிலங்

களில் துவரை, எள்ளு முதலிய தானியங்கள் பயிரிடப்படும். இவைகளுக்கு ஜலாதாரம் இல்லை. இவை அவ்வப்பொழுது பொழியும் மழையினாலேயே விளையவேண்டும். இவற்றிற்கு மானவாரிப் பயிர் என்று பெயர். நெற்பயிர் விளையும் நிலங்களே நன்செய் நிலங்கள் என்று சொல்லப்படும். இந்நிலங்களுக்கு ஏரி, மடு, ஆறு முதலியவைகளினின்றும் நீர் பாய்ச்சப்படும். புன்செய் நிலங்களைவிட நன்செய் நிலத்திற்கே தீர்வை அதிகம்.

நெற்பயிரிடுவதையும் இருவகையாகப் பிரிக்கலாம். அவை புழுதிப்பயிர், சேற்றுப்பயிர் என்பன. சொற்பகாலம் பாயக்கூடிய சிற்றேரிகளின் கீழுள்ள நிலங்களும் மேட்டுப்பாங்கான இடங்களிலுள்ள நிலங்களும் பெரும்பாலும் புழுதியிலேயே பயிரிடப்படும். நிலத்தை ஈரமாயிருக்கும்போது கலப்பைகொண்டு உழுது மண்ணைக்கீழ் மேலாக்கிப் புழுதியை உலரச் செய்வார்கள். ஒரு புலத்தை விதைப்பதற்கு முன் ஐந்தாறுசால் உழவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு புழுதி உலர்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பலன் கொடுக்கும். புழுதியை நன்றாக உலர்த்திவிட்டால் எருவும் அனவசியமென்று திருவள்ளுவரும் தமது திருக்குறளில் கூறியிருக்கிறார். அவ்வாறு புழுதியாக்கியபின் எருவுமிட்டு மிதமான ஈரமாயிருக்கும்போது விதையைத் தூவி விதைப்பார்கள். சில இடங்களில் கொறுகலப்பையின் மூலமாயும் விதைப்பார்கள். கொறுகலப்பையின் மூலமாய் விதைப்பதில் விதை சமமாய் விழுந்து இடைவெளிவிட்டு முளைக்கும். அவ்வாறு இடைவெளி இருப்பதனால் பயிர்கள் காற்றோட்டமாய் வளர்வதற்கு அனுகூல

மாயிருக்கும். இதற்கு ஒரு மாதம்வரையில் அதிக மழை கூடாது. பிறகே நீர் பாய்ச்சிக் களை பறிக்கவேண்டும். புழுதியிலேயே களையெடுப்பதும் உண்டு. ஆற்றுக்கால் பாய்ச்சலிலும் பேரேரிப்பாய்ச்சலிலுமுள்ள நிலங்களில் சேற்றுப் பயிர் இடப்படும். புலங்களில் நீர் இறைத்து, உழுது சேருக்கி, எரு, தழை முதலியன இட்டுப் பரம்படித்து நிலத்தைச் சமப்படுத்தி விதைப்பார்கள். விதையை நீரில் ஊறப்போட்டு இரண்டு அல்லது மூன்று நாளானபின் விதைப்பார்கள். விதைத்தமறுநாள் புலத்திலுள்ள ஜலத்தை வடிய விடுவார்கள். ஜலம் வடிந்து இரண்டு மூன்று நாளானபின் முளை கிளம்பிப் பசும் பயிராகும். பிறகு அறுவடைவரையில் ஜலம் இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

சிலர், புலத்தின் ஓர் மூலையில் விதையை நாற்றுவிட்டு, நாற்று, நாற்பது ஐம்பதுநாள் வளர்ந்த பிறகு அதைப் பெயர்த்து மேற்கூறியவாறு சேருக்கிய புலத்தில் நடுவார்கள். இதற்கு நடவு என்று பெயர். நடவுப்பயிரே மற்றவற்றைக்காட்டிலும் அதிக பலன் கொடுக்கும் என்று இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நெற்பயிர் கதிர் வரும்வரையில் தலைநிமிர்ந்து, மணி முற்றியபின் தலை சாய்ந்து நிற்கும். மணி நன்றாய் முற்றியபின் உழவர்கள் அறுத்துச் சுமை கட்டிக் களமேட்டில் கொண்டுபோய் அடுக்கி வைப்பார்கள். பின்னர் கட்டுகளையவிழ்த்து, அரியரியாக எடுத்தடித்து நெல்லைக் குவித்து, வைக்கோலைப் போராக்குவார்கள். பிறகு நெல்லை நன்றாய் உலர்த்தித் தூற்றிப் பதர்போக்கிச் சுத்தமாக்குவார்கள். வைக்

கோலை மாடுகளைக்கொண்டு மிதிப்பித்து, அதினின்று உதிரும் நெல்லை எடுத்துக்கொண்டு வைக்கோலைப் போராக்கி மாடுகளுக்கு உபயோகப்படுத்துவார்கள். மேற்கூறிய வாறு சுத்தமாக்கிய நெல்லைப் புழுக்கிக் குத்தி அரிசியெடுப் பார்கள். சிலர் நெல்லைப் பச்சையாகவே குத்தி அரிசியெடுப் பார்கள். இவை முறையே புழுங்கலரிசியென்றும், பச்சரிசி யென்றும் சொல்லப்படும். இதுதான் நம் முக்கிய உணவுப் பொருள்.

இப்பயிர்த் தொழிலே பலர்க்கும் உபயோகமானது. இது சிறந்த தொழிலென்று கருதப்படுகிறது. இதனால் தான்,

"மேழிச் செல்வம் கோழைபடாது." என்றும் "தொழுதூண் சுவையின் உழுதூணினிது" என்றும் ஔவைப் பிராட்டியும் கூறியிருக்கிறாள்.

திருவள்ளுவநாயனார் தமது திருக்குறளில் உழவு என்னும் அதிகாரத்தில் இத்தொழிலைச் சிறப்பித்திருப் பதை நீவிர் பெரியவர்களாகும்போது படித்து மகிழ்வீர் கள்.

32. பந்தாட்டம்.

பந்து விளையாடுவதில் பாலர்களுக்குப் பிரியம் அதிகம். தற்காலத்தில் பெரியோர்களுக்கே அதில் அதிகப் பிரியமாய் இருக்கிறது. பாலர்கள் பந்தாடுவதைக் காட்டிலும் பெரியோர்கள் பந்தாடும் முறை மெச்சத் தக்கதாய் இருக்கிறது. பாலர்கள் முதல், பெரியோர்கள் வரையில் கையாளும் இப்பந்தைப்பற்றி நாம் ஒரு சிறிதேனும் அறிந்து கொள்ளல் வேண்டாமா? இப்பந்து உருண்டை வடிவமுள்ளதென்று சொல்லவும் வேண்டுமோ? பூமி உருண்டை என்பதற்குப் பந்தையே உவமை கூறுகின்றோமல்லவா? பந்துகளெல்லாம் ஒரே நிறமுடையனவல்ல. இப்பந்துகளில் சில மிருதுவாயும், வேறு சில கெட்டியாயும் இருக்கின்றன. கெட்டியான பந்துகள் மரக்கட்டைகளாலும், மிருதுவான பந்துகள் கம்பளி நூலினாலும், ரப்பராலும் செய்யப் படுகின்றன. அக்கம்பளி நூல் செம்மறியாட்டினின்றும், கட்டையும், ரப்பரும் மரத்திலிருந்தும் கிடைக்கின்றன.

கம்பளி நூலால் செய்த பந்தை கெட்டியான தரையில் எறிந்தால் சத்தம் உண்டாகாது. அதை ஒரு மனிதன் பேரில் எறிந்தாலும் துன்பம் ஒன்றும் நேரிடாது. மரப் பந்தோ தரையில் எறியப்பட்டால் சத்தம் உண்டாக்குவதுடன் மனிதன்மேல் பட்டாலும் அவனுக்குத் துன்பம் விளைவிக்கும். ரப்பர்ப் பந்தை தரையில் எறிந்தால் மேலே எழும்பும். அந்த ரப்பர்ப் பந்தே பிள்ளைகளுக்கு மெத்தப் பிரியமானது.

இவற்றுள் காலால் அடிக்கும்பந்து (Foot ball) மிகப் பெரியது. இது உள்ளே ரப்பர் அமைந்து மேலே தோலால்

மூடப்பட்டிருக்கும். இது காற்று நிரப்பியே உபயோகிக்கப்படும். இப்பந்தை உபயோகித்து ஆடும் ஆட்டமே இந்நாட்டில் அதிகம். இவ்வாட்டத்தில் சிறுவர்கள் பாலிய முதலாகவே பழகவேண்டுமென்பது அரசாங்கத்தார் கொள்கை. இதைக் காலாலடித்து விளையாடுவதால் காலுக்கு அதிக உரம் உண்டாகும். இவ்வாட்டம் ஆடும் பொழுது நுண்ணிய அறிவும் வேண்டும். அவ்வறிவை விசாலப்படுத்த ஆழ்ந்த யோசனையும் வேண்டும். ஆகையின் இவ்வாட்டம் தேகபலத்துக்கு மாத்திரமன்றி மனோபலத்துக்கும் ஏற்றதெனக் கருதப்படுகிறது. இவ்வாட்டத்திற்குரிய விதிகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்விதிகளுக்கு இணங்கியே ஒவ்வொருவனும் ஆடவேண்டுமாதலால் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்கிற உயரிய நோக்கமும் மனதில் பதிகிறது.

பாடசாலைகளில் பந்தடிக்கும் கருவிகளைக் கொண்டு பந்து விளையாடுவதைப் பார்த்திருப்பீர்களல்லவா? இதற்கு பாட்மின்டன் (Bat-minton) என்று பெயர். இந்த அப்பியாசம் கையினால் நடைபெறுவதால் இது கைக்கு பலத்தைத் தருகிறது. இதுவும் நுண்ணறிவையும், மனமகிழ்ச்சியையும் உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. இப்பந்துதான் கம்பளியினால்செய்யப்பட்டது. இது சிறிய வடிவமுடையது.

ஹாக்கி, கிரிக்கட் முதலிய விளையாட்டுகளும் ஓர்வித பந்தைக்கொண்டே நடைபெறுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் பொதுவாய்ப் பந்தாட்டம் என்று பெயர்.

பூர்வத்தில் நம்மவர்கள் துணியைச் சுற்றிதான் பந்தாடிக்கொண்டு வந்ததாகச் சொல்லுகிறார்கள்.

மாதிரிக் கடிதங்கள்.

15, பெரிய மணியக்காரத் தெரு,
செங்கற்பட்டு.
19–12–'33.

அன்பு நிறைந்த உபாத்தியாயர் அவர்களுக்கு,

சிங்காரம் வணக்கமாய் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

ஐயா,

20-ந்தேதியாகிய நாளையதினம் என் தங்கையின் விவாகத்தை முன்னிட்டு பெங்களூருக்குப் போய் வரவேண்டியிருப்பதால் தயை செய்து இன்று முதல் ஐந்து நாளைக்கு லீவு கொடுக்க வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
சிங்காரம்.

மேல் விலாசம்.

மகா—ா—ா—ஸ்ரீ
அநந்தாச்சாரியாரவர்கள்,
உபாத்தியாயர்,
செயின்ட் ஜோஸப்ஸ் ஹை ஸ்கூல்,
செங்கற்பட்டு.

தந்தைக்கு.

சந்நதி வீதி,
திருப்போரூர்.
15—12—'33.

எனது பிரியமுள்ள தந்தையாருக்கு,

ஆறுமுகன் தண்டன் சமர்ப்பித்து எழுதிக்கொண்ட விண்ணப்பம்.

தங்கள் ஆசிர்வாதத்தாலும், கடவுளது கருணையாலும் நானும்,எனது நேசர்களும் இங்கு சுகமே துய்த்துள்ளோம். அங்கிருந்து அறிய விரும்புவதும் அஃதே.

சென்ற வருஷத்தில் நான் படிப்பில் விருத்தியடைய வில்லையென்று தாங்களும், எனது அருமைத் தாயும் வருந்திப் புத்தி புகட்டினதை நான் சிறிதும் மறக்கவில்லை. இவ்வாண்டில் நான் பெரிதும் முயற்சித்து விருத்தியடைந் திருக்கிறேன். அது விஷயத்தில் தங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டாம்.

என் செலவுக்கும், சில நூதன புத்தகங்கள் வாங்கு வதற்கும் சிறிது தொகை வேண்டியிருக்கிறது. காலமழை யின்மையால் தாங்கள் படும் கஷ்டம் உணர்வேன். எனினும், பணம் அவசியம் வேண்டியிருப்பதால் தங்களுக்குச் சிரமம்

கொடுக்கலானேன். தயை செய்து மணியார்டர் மூலமாக ஐந்து ரூபாயாவது அனுப்பவேண்டுகிறேன், மன்னிக்கவும்.

இங்ஙனம்.

தங்களிடம் பேரன்பு வாய்ந்த,

ஆறுமுகன்.

மேல் விலாசம்.

திருவாளர்,

க. பரமசிவ முதலியாரவர்கள்,

மிராசுதார்,

தாதாபுரம்,

வெள்ளிமேடு போஸ்டு,

வட ஆற்காடு.

நண்பனுக்கு.

சாஹூர்,
படாளம் போஸ்டு.
16—12—'33.

நீங்காப் பிரியமுள்ள எனது உயிர் நண்பனும் கோவிந்தனுக்கு:—

அய்யாசாமி அன்புடன் தெரிவித்துக் கொள்வது,

நீ என்னை விட்டுப் பிரிந்த நாள்முதல் இதுவரையில் ஒரு கடிதமும் எழுதவில்லை. நான் எழுதுவதற்கும் இதுவரையில் உன் விலாசம் தெரியாமல் போய்விட்டது. இப்பொழுதுதான் நீ அங்கு தலை மாணக்கனுய் சிறந்து விளங்குவது கேள்விப் பட்டேன். அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். இனியாகிலும் உடனே கடிதம் எழுத வேண்டுகிறேன்.

நான் இவ்வருடத்தில் நன்முய் வாசித்து வருகிறேன். என் பாடசாலை ஆசிரியர் பலரும் என்னை அன்புடன் ஆதரித்து வருகிருர்கள். அவர்கள் போதிக்கும் முறை பெரிதும் பாராட்டத் தக்கது. அவர்கள் கற்பிக்கும் விஷயம் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து வருகிறது. சரீர சௌக்கியத்தின் பொருட்டு பல விளையாட்டுகள் நடைபெற்று வருகின்றன. உபாத்தியாயர்களும் உடனிருந்து பயிற்றுகிருர்கள். நாங்கள் இதார்களுடன் சிநேகமாய் விளையாடி வருகிறோம்.

சில தினங்களுக்கு முன் அடித்த காற்றினால் இங்கு சிறிது சேதம் நேர்ந்தது. ஆனால், மழையினால் பயன் அதிகமே. அங்கு எவ்வாறு இருக்கிறது? அடுத்த லீவில் உன்னைச் சந்திக்க விரும்புகிறேன். நீ என் உடனிருந்து பார்க் வேடிக்கைகளை எனக்கு நன்றாகக் காட்டி என்னை மகிழ்விக்குமாறு வேண்டுகிறேன். மற்றது நேரில் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம்,
உனது நண்பன்,
அய்யாசாமி.

மேல் விலாசம்.

திருநிறை செல்வர்,
கோவிந்த நாயகர்,
165, லிங்கச்செட்டித் தெரு,
சென்னை.

100

இளையோனுக்கு.

5, மண்டபத் தெரு,
பிள்ளையார் பாளையம்,
காஞ்சிபுரம்.
6—12—'33.

எனது அருமைத்தம்பி கோவிந்தனுக்கு,

எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால் சகல நன்மைகளும் பெருக வேண்டுகிறேன்.

நீ பள்ளிக்கூடத்தில் நன்ருய் வாசிக்கவில்லையென்றும், கெட்ட பிள்ளைகளோடு சேர்ந்திருப்பதாயும், நம் தாயார் எழுதிய கடிதத்தில் தெரிந்துகொண்டேன். 'கல்வியே கருந்தனம்' என்று பலமுறையும் நான் உனக்குப் போதித்திருந்தும் அதை அலட்சியம் செய்தமைக்கு நான் பெரிதும் வருந்துகிறேன். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்தல்லவா?' இப்பொழுது நீ படிக்காவிட்டால், முதுமையில் கஷ்டப்படுவாய். ஆகையால் இனியாவது கல்வியில் கவனம் செலுத்தவும்.

உலகத்தில் எல்லோரும் கெட்டிக்காரராக இருத்தல் முடியாத காரியம். ஆனல், எல்லோரும் நல்லவர்களாய் இருக்கலாம். துர்க்குணமுள்ள கெட்டிக்காரரைவிட நல்லவர்களையே கடவுள் நேசிப்பார். ஒவ்வொருவரும் நல்லவரா

வதற்குச் சகவாசமே முக்கியம். நீ இனி கெட்டபிள்ளைகளோடுச் சேராதே. நல்லவர்களை நாடிச்சேர். நல்லவனென்று பெயரெடு.

உன் சரீர சௌக்கியத்திற்கு வேண்டிய வஸ்துக்கள் வாங்குவதற்கும், கல்வி விருத்திக்கு வேண்டிய புஸ்தகங்கள் பெறுவதற்கும், அவசியமான பணம் அப்போதைக்கப்போது உனக்கு அனுப்புகிறேன். மறுகடிதத்தில் நம் தாயார் உன்னைப்பற்றி நன்றாக எழுதும்படி நீ நடந்து கொள்வாய் என்று நம்புகிறேன். அமலமூர்த்தியான ஆண்டவன் உன்னை ஆசிர்வதிப்பாராக.

இங்ஙனம்,
உன்னிடத்தில் அன்புள்ள தமையன்,
N. பாலகிருஷ்ணன்.

மேல் விலாசம்.

சிரஞ்சீவி,
N. கோவிந்தன்,
மாணவன்,
5-வது வகுப்பு,
முனிசிபல் ஸ்கூல்,
மதுரை.

கடவுள் வாழ்த்து.

உலகந் தன்னில் உதித்தோர் யாரும்
நலமுற எண்ணும் நாதன் துணையே.
அன்னையும் பிதாவுமாய் ஆளும் அமலன்
பொன்னடி போற்றிப் புகழ்வோம் யாமே.
அறம்பொரு ளின்பமும் அழியா வீடும்
திறம்பட அளிக்கும் தேவா போற்றி.

முதுமொழிக் காஞ்சி.

கற்றலில் கற்றுணர் வழிபடுதல் சிறந்ததன்று.
தேராமல் கற்றது கல்வி யன்று.
மக்கள் பேற்றில் பெரும் பேறில்லை.
நசையில் பெரியதோர் நல்குரவில்லை.
இரத்தலின் ஊங்கு இளிவர வில்லை.
இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்பில்லை.
கள்ளுண்போன் சோர்வின்மை பொய்.
கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.
வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.
இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்.

நல்வழி.

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக் கேலென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது.

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்.
உற்றார் உகந்தார் எனவேண்டா—மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தான்.

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா(து) உணர்வு.

நீதி வெண்பா.

தன்னை யளித்தாள் தமையன் மனைகுருவின்
பன்னி அரசன் பெருந்தேவி—தன்மனையைப்
பெற்றாள் இவரைவர் பேசில் எவருக்கும்
நற்றாயர் என்றே நவில்.

தூய அறிவினர்முன் சூழ்துன்பம் இல்லையாம்
காயும் விடம்கருடற் கில்லையாம்—ஆயுங்கால்
பன்முகஞ்சேர் தீமுன் பயில்சீதம் இல்லையாம்
துன்முகனுக் குண்டோ நரகம்.

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பெற்றதிலோர்
நற்புதல்வ ரைப்பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனா லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது.

புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தால் அன்றியே
மற்றமிகு பாவத்தால் வாழ்வோமோ—வித்துபயிர்
தாயாகி யேவளர்க்கும் தண்புனலால் அல்லாது
தீயால் வளருமோ செப்பு.

மனம்வேறு சொல்வேறு மன்னு தொழில்வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளும்
கனமொன்றும் மேலவர்தம் கண்.

[ஒன்றே

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரில் அவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்வரோ பார்.

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறியல் ஆகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு.

உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து.

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும் நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ விளம்பு.

ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிரும்
கான வரியுகிருங் கற்றோரும்—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
சிறந்த விடத் தன்றோ சிறப்பு.

மூதுரை.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே-விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால்—தந்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று.

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ(து) அவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போ(து) அவளோடும் போம்.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

நன்னெறி.

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்(து)
அதிர்வளையாய் பொங்கா (து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர்—அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவரே—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை.

நல்லார் செயுங்கேண்மை நாள்தோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே—நல்லாய்! கேள்
காய்முற்றின் தின்தீம் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம்.

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவின் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்.

உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு.

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்தும் அவன் (கு) என்செய்யும்—நல்லாய்!
மொழியிலார்க் கேது முது நூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமை அடைந்தோர்—தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல்.

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயன் உதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

நல்லோர் வரவால் நகைமுகம்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார்—வல்லோர்
திருந்தும் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்தும் சுழல்கால் வர.

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிற உறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினல்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு.

உண்டு குணம்இங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி.

கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறம்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு.

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும்வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்கும் கடிது.

அறிவுடையார் அன்றி அதுபெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும்—பிறைநுதால்!
வண்ணம்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு.

தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.